ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மகத்தான சாதனைகள்! பக்கம் 3

இறைஇருப்பு, இறைஞானத்தைப் பெறுவதற்கான வழிகள் (தொடர்-2) பக்கம் 9

முனாஃபிக்(நயவஞ்சகர்)களை அடையாளம் காண்பதும் எதிர்கொள்வதும் எப்படி? (தொடர்ச்சி...) பக்கம் 15

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு (தொடர்-14) பக்கம் 20



மாத இதழ்

# நுபுவ்வத் வழி


www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | February 2023 | Vol. 2 - Issue No. 3



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 96297 46340


முஸ்லிஹ் மவ்வூது
(வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி)
ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன்
மஹ்மூது அஹ்மது (ரலி)
இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்
(1889 - 1965)





# திருக்குர்ஆன்

وَلَمَّا ضُرِبَ ابْنُ مَرْيَمَ مَثَلًا اِذَا قَوْمُكَ
مِنْهُ يَصِدُّوْنَ

மர்யத்தின் மகன் ஓர் உவமையாக எடுத்துரைக்கப்படும் போது உமது சமுதாயத்தினர் அதனைக் குறித்துக் கூச்சலிடத் தொடங்குகின்றனர். (43:58)



# ஹதீஸ்

عَبْدُ اللهِ بْنِ عَمْرٍو قَالَ
قَالَ رَسُوْلَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ
يَنْزِلُ عِيْسَى ابْنُ مَرْيَمَ اِلَى الأَرْضِ فَيَتَزَوَّجُ وَيُوْلَدُلَهٗ

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் அம்ர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

“ஈஸப்னு மர்யம் பூமியில் இறங்குவார்கள். திருமணம் புரிவார்கள். மேலும், குழந்தைகளைப் பெறுவார்கள்.”

(மிஷ்காத் அல் மஸாபிஹ், கிதாபுல் ஃபிதன் ஹதீஸ் எண்: 5508)

# வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி
# ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் *மகத்தான சாதனைகள்!*



அபூ அப்துல்லாஹ்

அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் முஸ்லிஹ் மவ்வூது (வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி) பற்றிய முன்னறிவிப்பு தொடர்பாக பிப்ரவரி 20 -ஆம் நாள் சிறப்பாக நினைவு கூறப்படுகிறது. ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் 1886 -ஆம் ஆண்டு இந்த நாளில்தான் இஸ்லாத்தின் சிறப்பான ஓர் ஊழியராகத் திகழப்போகும் தமது ஒரு மகனைக் குறித்த முன்னறிவிப்பை வெளியிட்டார்கள். வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியான ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பிறப்பதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்ட இந்த முன்னறிவிப்பில் அன்னாரது பண்புகளைக் குறித்தும் பணிகளைக் குறித்தும் அல்லாஹ்வால் முன்னறிவிக்கப்பட்ட பல நற்செய்திகள் இடம் பெற்றிருந்தன. அன்னாரது அருளுக்குரிய 52 ஆண்டு கிலாஃபத் காலக்கட்டத்தில் (1914-1965) இந்த முன்னறிவிப்புகள் பிரகாசமான முறையில் நிறைவேறின. அன்னாரது சாதனைகள் சிலவற்றின் சுருக்கம் கீழே தரப்படுகின்றது.

### மஜ்லிஸே ஷூரா

இறைவன் அஹ்மதிய்யா ஜமாஅத் முழு உலகிலும் பரவி விடும் என்று வாக்குறுதி அளித்துள்ளான். இதற்கு அடிப்படைத் தேவை நிர்வாக அமைப்பை ஏற்படுத்துவது ஆகும். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இதன் தேவையை உணர்ந்தார்கள். அவர்கள் ஏற்படுத்திய அமைப்பில்தான் இன்றளவும் அஹ்மதிய்யா ஜமாஅத் பயணித்துக் கொண்டிருக்கிறது. கிலாஃபத் பதவியில் அமர்ந்த ஒரு மாதத்திலேயே 1914 ஏப்ரல் மாதம் குறிப்பாக இஸ்லாத்தின் தூதுச் செய்தியைப் பரவச் செய்வதற்காக அன்னார் 'மஜ்லிஸே ஷூரா' (ஆலோசனை சபை) என்ற அமைப்பைக் கூட்டினார்கள் 1922 -ல் 'மஜ்லிஸே ஷூரா' என்ற இந்த அமைப்பு நிரந்தர அமைப்பாக மாற்றப்பட்டது. திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள இந்த அருளுக்குரிய அமைப்பு ஆண்டுதோறும் காலத்தின் கலீஃபாவின் கண்காணிப்பின் கீழ் ஜமாஅத்தின் முக்கியமான முடிவுகளையும் திட்டங்களையும் முன்னெடுப்பதற்காக கூடுகிறது. இதற்காக ஜமாஅத்தின் அனைத்து கிளைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தலைமை -யகத்தில் ஒன்று கூடுகின்றனர். இஸ்லாத்தில் கிலாஃபத்திற்கு அடுத்தபடியாக மஜ்லிஸே ஷூரா என்ற இந்த அமைப்பு முக்கியத்துவத்தைப் பெறுகிறது.

### நஸாராத்கள்

1919 ஏப்ரல் மாதம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பல்வேறு துறைகளை (நஸாராத்கள்) ஏற்படுத்தி நிர்வாகக் கட்டமைப்பைச் சீர்படுத்தினார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் இது ஒரு முக்கிய மைல் கல் ஆகும். தஃலீம், தர்பிய்யத், தப்லீக், பொருளாதாரம், உள்துறை, வெளித்துறை போன்ற பல்வேறு துறைகளுக்கான தனித்தனி அலுவலகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இதன் மூலம் ஜமாஅத்தின் பணிகள் துரிதப்படுத்தப்பட்டன.

### கிளை அமைப்புகள்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் பல்வேறு கிளை அமைப்புகளை நிறுவினார்கள். அவற்றுள் முதலாவதாக 'லஜ்னா இமாயில்லாஹ்' என்ற அமைப்பு டிசம்பர் 1922 -ல் ஏற்படுத்தப்பட்டது. இது பதினைந்து வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கான அமைப்பாகும். 1928 -ல் 'மஜ்லிஸ் நாஸிராத்துல் அஹ்மதிய்யா' என்ற அமைப்பு 15 வயதிற்குக் கீழுள்ள சிறுமிகளுக்காக நிறுவப்பட்டது. 15 வயது முதல் 40 வயது வரை உள்ள ஆண்களுக்காக 'மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா' என்ற அமைப்பு டிசம்பர் 1938 -ல் ஏற்படுத்தப்பட்டது. 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு 'மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்' என்ற அமைப்பும் 15 வயதுக்குக் கீழுள்ள சிறுவர்களுக்கு 'அத்ஃபாலுல் அஹ்மதிய்யா' என்ற அமைப்பும் ஜூலை 1940 -ல் நிறுப்பட்டன. இந்த அனைத்து கிளை அமைப்புகளும் தத்தமது வட்டத்தில் தமக்கென வகுக்கப்பட்ட செயல்திட்டங்களைக் கொண்டு

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் குறிக்கோளான இஸ்லாத்தைப் பரவச் செய்யும் பணியில் தம்மை அர்ப்பணிக்கின்றன.

### ஜாமிஆ அஹ்மதிய்யா

திறன் மிக்க இஸ்லாமிய பிரச்சாரகர்களாக மாறி இஸ்லாத்தின் சேவைக்காக தமது முழு வாழ்வையும் அர்ப்பணித்துக் கொள்ள முன் வருகின்ற இளைஞர்களுக்காக 1928 மே மாதம் ஜாமிஆ அஹ்மதிய்யா என்ற மார்க்கக் கல்வி நிறுவனத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஏற்படுத்தினார்கள். இந்தத் திட்டம் மிகவும் பயன் தரத்தக்கதும் வெற்றிக்குரியதும் ஆகும். இன்று காதியானிலும் ரப்வாவிலும் மட்டுமின்றி இங்கிலாந்து, ஜெர்மனி, கனடா, இந்தோனேஷியா மற்றும் பல்வேறு ஆப்ரிக்க நாடுகளிலும் ஜாமிஆ அஹ்மதிய்யா நிறுவப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் தமது வாழ்வை அர்ப்பணித்துக் கொண்ட ஆயிரக்கணக்கான இஸ்லாமிய பிரச்சார -கர்கள் ஆண்டுதோறும் உருவாக்கப்பட்டு மார்க்கப் பணிகளில் ஈடுபடுத்தப்படு -கின்றனர்.



ஜாமிஆ அஹ்மதிய்யா, காதியான்

### தாருல் கஸா

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் 1925 -ல் தாருல் கஸா என்ற நீதித்துறை அமைப்பை ஏற்படுத்தினார்கள். இதன் மூலமாக அஹ்மதிகள் தமக்கிடையிலான பிணக்குகளை இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் எளிதாக, செலவுகளின்றி, கண்ணியமிக்க முறையில் தீர்த்துக் கொள்கின்றனர். இந்த அமைப்பு அஹ்மதிய்யா ஜமாஅத்தால் முழு உலகிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### ஆராய்ச்சி நிலையமும் கல்வி நிலையங்களும்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அஹ்மதி ஆண்கள் மற்றும் பெண்களின் மார்க்க மற்றும் உலகக் கல்விக்கு பெரிதும் முக்கியத்துவம் வழங்கினார்கள். ஃபஸ்லே உமர் அறிவியல் ஆராய்ச்சி நிலையம் 1946 -ல் காதியானில் துவங்கப்பட்டது. 1928 -ல் காதியானில் நுஸ்ரத் பெண்கள் பள்ளியும் 1951 -ல் ரப்வாவில் ஜாமிஆ நுஸ்ரத் என்ற பெயரில் பெண்கள் கல்லூரியும் நிறுவப்பட்டது. இவற்றில் மார்க்கக் கல்வியும் கற்பிக்கப்பட்டன. இவை போன்ற உலகின் பல்வேறு நாடுகளில் அன்னாரது கிலாஃபத்தின் போது 57 கல்லூரிகளும் பள்ளிக்கூடங்களும் நிறுவப்பட்டன. இந்த அனைத்து கல்வி நிறுவனங்களும் இஸ்லாம் எந்த அளவு கல்வி கற்பதை ஆண்களுக்கும் பெண்களுக்கும் கடமையாக்கியுள்ளது என்பதற்கான சிறந்த சான்றுகளாகும்.

### சுத்தி கேம்ப்

1923 -ல் இந்தியத் துணைக்கண்டத்தில் சுத்தி இயக்கம் என்ற பெயரில் உத்திரபிரதேசத்தில் மல்கானா இனத்தைச் சேர்ந்த முஸ்லிம்களை இந்துக்களாக மாற்றும் தீவிர முயற்சி ஆரிய சமாஜ இயக்கத்தால் மேற்கொள்ளப்பட்டது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்தத் திட்டத்தை முறியடிப்பதற்காக 'சுத்தி கேம்ப்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார்கள். அதன்படி முதல் கட்டமாக பயிற்சி பெற்ற 150 தன்னார்வலர்கள் எந்தவித ஊதியமுமின்றி முழு மூச்சுடன் முஸ்லிம்களுக்கு மார்க்கப் பயிற்சி அளிப்பதிலும் இஸ்லாமிய பிரச்சாரப் பணியிலும் ஈடுபட்டனர். பின்னர் ஆயிரக்கணக்கான அஹ்மதிகள் 3 மாத காலத்திற்கு தன்னார்வத்துடன் தம்மை அர்ப்பணித்தவர்களாக உத்திரபிரதேசம் சென்று இந்தப் பணியில் ஈடுபட்டனர். அல்லாஹ்வின் அருளால் இந்தத் திட்டம் முஸ்லிம்களைத் தடுமாறுவதிலிருந்தும் காப்பாற்றியதுடன் இந்துக்கள் இஸ்லாத்தைத் தழுவுவதற்கும் காரணமாயிற்று. முஸ்லிம்களின் பிரபல தலைவர்களும் கூட அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இந்த முயற்சிகளை மனம் திறந்து பாராட்டினர்.

### வெம்ப்ளி மாநாடு

1924 -ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இலண்டனில் நடைபெற்ற வெம்ப்ளி சர்வ சமய மாநாட்டில் கலந்து கொண்டார்கள். 'அஹ்மதிய்யத் எனும் உண்மை இஸ்லாம்' என்ற தலைப்பில் அமைந்த அவர்களது சொற்பொழிவு ஹஸ்ரத் சவுத்ரி ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் (ரலி) அவர்களால் வாசிக்கப்பட்டது. இந்தக் கட்டுரை மாநாட்டில் கலந்து

கொண்டிருந்த அனைவராலும் வெகுவாகப் பாராட்டப்பட்டது.



வெம்ப்ளி மாநாட்டில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள்

## அரசியல் தீர்வுகள் மற்றும் கைதிகளின் விடுதலை

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அரசியல் விஷயங்கள் குறித்த ஆழமான அறிவையும் ஞானத்தையும் பெற்றிருந்தார்கள். தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் பல்வேறு அரசியல் சிக்கல்களுக்கு சரியான தீர்வுகளை வழங்கினார்கள். உதாரணமாக, 1930 -ல் காஷ்மீர் பிரச்சனை வலுப்பெற்ற போது அன்னார் அகில இந்திய காஷ்மீர் கமிட்டியின் முதல் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். காஷ்மீர் மக்களின் உரிமைகளுக்காக வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி அவர்கள் பெரும் முயற்சிகளை மேற்கொண்டார்கள். அவர்களின் கிலா∴பத் காலத்தில் 30 நாடுகளுக்கு விடுதலை கிடைத்தது. ஹஸ்ரத் சவுத்ரி ஸ∴பருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் அன்னாரது வழிகாட்டலைப் பெற்று அன்னாரது பிரதிநிதியாக ஐ.நா. பொதுச்சபையில் பல்வேறு நாடுகளின் விடுதலைக்காக குரல் கொடுத்தார்கள்.

## தஹ்ரீகே ஜதீது

1934 -ல் அஹ்ராரிகள் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராக முழு இந்திய அளவில் பிரச்சாரம் மேற்கொண்டு அஹ்மதிய்யா ஜமாஅத்தினை உலகிலிருந்து அழித்து விடுவோம் என்று சூளுரைத்தனர். அந்த நேரத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஜமாஅத்தினுடைய பாதுகாப்பிற்காக எடுத்த எதிர்நடவடிக்கை அதன் உலகளாவிய வெற்றிக்கு அடிப்படையாகவும் ஆகிவிட்டது. அதுவே 1934 -ல் அன்னார் துவங்கிய ‘தஹ்ரீகே ஜதீது’ என்னும் திட்டமாகும். அன்று தொடங்கப்பட்ட இந்தத் திட்டத்தின் கீழ் இன்று வரை முழு உலகிலுமுள்ள அஹ்மதிகள் ஆண்டுதோறும் இஸ்லாமிய பிரச்சாரத்திற்காக பொருள் தியாகம் செய்கின்றனர். இன்று 214 நாடுகளில் பரவிவிட்ட ஜமாஅத்திற்கு முழு உலகிலும் பல்லாயிரக்கணக்கான பள்ளிவாசல்களும், கொள்கைப்பரப்பு நிலையங்களும், மருத்துவமனைகளும், கிளினிக்குகளும், பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும், அச்சக நிலையங்களும் இருக்கின்றன. இவையனைத்தும் அல்லாஹ்வின் அருளினால் விளைந்த ‘தஹ்ரீகே ஜதீது’ திட்டத்தின் கனிகளே ஆகும்.

## வக்∴பே ஜதீத்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கிராமங்களில் வாழும் அஹ்மதிகளின் மார்க்கப் பயிற்சியை மேம்படுத்துவதற்காகவும் கிராமப் புறங்களில் இஸ்லாமியப் பிரச்சாரத்தை மேற்கொள்வதற்காகவும் 1958 -ஆம் ஆண்டு ‘வக்∴பே ஜதீது’ திட்டத்தை துவக்கினார்கள். இத்திட்டத்தின் கீழ் ஆயிரக்கணக்கான மார்க்கப் பிரச்சாரகர்கள் கிராமப்புறங்களில் பணியாற்றுகின்றனர். ஆரம்பத்தில் இந்தியா, பாக்கிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளுக்கு மட்டுமாக இருந்த இந்தத் திட்டம் பின்னர் முழு உலகிற்கும் உரியதாக ஆக்கப்பட்டது. முழு உலகிலுமுள்ள அஹ்மதிகள் ஆண்டுதோறும் இந்தத் திட்டத்தின் கீழ் பொருள் தியாகம் செய்து வருகின்றனர்.

## த∴ப்ஸீரே கபீர்

அல்லாஹ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு அளப்பரிய திருக்குர்ஆன் ஞானத்தை வழங்கியிருந்தான். திருக்குர்ஆனின் வசனங்களைக் குறித்த, முன்னர் வெளிப்படுத்தப்படாத ஆழிய ஞானங்கள் தமக்கு வெளிப்படுத்தப்பட்டிருப்பதாக அன்னார் வாதிட்டார்கள். திருக்குர்ஆனின் முதல் அதிகாரமான சூரா ∴பாத்திஹா பற்றி மட்டும் 300 -க்கும் அதிகமான சொற்பொழிவுகளை அன்னார் நிகழ்த்தியுள்ளார்கள். அவர்கள் திருக்குர்ஆனுக்கு எழுதியுள்ள விளக்கவுரை ‘த∴ப்ஸீரே கபீர்’ என்று அழைக்கப்படுகிறது. அது ஆன்மீக ஞானங்களின் கருத்துக் களஞ்சியமாகத் திகழ்கிறது. 6000 -க்கும் அதிகமான பக்கங்களைக் கொண்ட ‘த∴ப்ஸீரே கபீர்’ 10 தொகுதிகளைக் கொண்டதாகும்.இவற்றில் திருக்குர்ஆனின் 59 அதிகாரங்களுக்கான விளக்கவுரைகள் இடம் பெற்றுள்ளன. அன்னார் எழுதிய ‘த∴ப்ஸீரே ஸகீர்’ என்னும் திருக்குர்ஆனின் சிறிய விளக்கவுரை 1071 பக்கங்களைக் கொண்டதாகும்.


## நூல்கள்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சொல்வன்மை மிக்க பேச்சாளரும் மிகச் சிறந்த எழுத்தாளரும் ஆவார்கள். அவர்கள் பல மணி நேரங்கள் தொடர்ந்து சொற்பொழிவாற்றும் திறமை பெற்றிருந்தார்கள். அன்னாரது பல சொற்பொழிவுகள் நூற்களாகவும் வெளிவந்துள்ளன. அஹ்மதிய்யத்தின் பக்கம் ஓர் அழைப்பு, இஸ்லாம் கூறும் பொருளாதார அமைப்பு, இறை தியானம், திருக்குர்ஆனுக்கு முன்னுரை போன்ற நூல்கள் அன்னார் எழுதிய சில நூற்கள் ஆகும். அன்னாரது நூல்கள் மற்றும் சொற்பொழிவுகள் அன்வாருல் உலூம் என்ற பெயரில் தொகுதிகளாக

வெளியிடப்பட்டுள்ளன. இதுவரை வெளியிடப்பட்டுள்ள 26 தொகுதிகளில் அன்னாரது நூல்கள், சொற்பொழிவு-கள் மற்றும் கட்டுரைகளின் மொத்த எண்ணிக்கை 670 ஆகும். அன்னாரது ஜுமுஆ உரைகள் ‘குத்பாத்தே மஹ்மூது’ என்ற பெயரில் இதுவரை 39 தொகுதிகள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் 1959 வரை நிகழ்த்தப்-பட்ட அன்னாரது 2367 ஜுமுஆ சொற்பொழிவுகள் இடம் பெற்றுள்ளன.

### ரப்வா

1947 -ல் இந்தியா பாக்கிஸ்தான் பிரிவினையின் போது அஹ்மதிகள் உட்பட ஏராளமான முஸ்லிம்கள் இந்தியாவைத் துறந்து பாக்கிஸ்தான் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஜமாஅத்தை வழிநடத்த ஒரு தலைமையகம் இல்லாத சூழ்நிலையில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இறைவனின் வழிகாட்டலுக்கேற்ப சுமார் 1000 ஏக்கர் தரிசு நிலத்தை விலைக்கு வாங்கினார்கள். அதற்கு ‘ரப்வா’ எனப் பெயரிட்டார்கள். 1948 செப்டம்பர் 20 -ஆம் நாள் நிர்மாணிக்கப்பட்ட புதிய தலைமையகமான ரப்வாவில் ஆரம்பத்தில் மண் குடிசைகளே உருவாக்கப்பட்டன. நாளடைவில் வியக்கத்தக்க வளர்ச்சி பெற்று தற்போது பாக்கிஸ்தானின் மாபெரும் பெருநகரங்களுள் ஒன்றாக ‘ரப்வா’ திகழ்கிறது.



ரப்வாவின் பழைய தோற்றம்




ரப்வாவின் புதிய தோற்றம்

### இஸ்லாமிய பிரச்சாரம்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் அருளுக்குரிய 52 ஆண்டு கால கிலா.்பத்தின் போது அஹ்மதிய்யத் முழு உலகிலும் மாபெரும் வளர்ச்சி கண்டது. அன்னாரது கிலா.்பத்தின் ஆரம்பத்தில் ஏற்கனவே இங்கிலாந்தில் ஜமாஅத் நிறுவப்பட்டிருந்தது. பின்னர் இலங்கையிலும், 1915 -ல் மொரிஷியஸிலும் ஜமாஅத் தோற்றுவிக்கப்பட்டது. 1920 -ல் அமெரிக்கா-விற்கும், 1921 -ல் நைஜீரியாவிற்கும் முதன் முதலாக மார்க்கப் பிரச்சாரகர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர்.

பின்னர் ‘தஹ்ரீகே ஜதீது’ திட்டத்தின் கீழ் தமது வாழக்கையை அர்ப்பணம் செய்திருந்த மார்க்கப் பிரச்சாரகர்கள் மூலமாக அமெரிக்காவில் டிரினிடாட், கயானாவிலும், ஐரோப்பாவில் ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி, ஹாலண்ட், போஸ்னியா, அல்பேனியா, யுகோஸ்லேவியா, போலந்து, நார்வே, டென்மார்க், ஸ்வீடன், ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்திலும், மேற்கு ஆப்ரிக்காவில் நைஜிரியா, கானா, சிராலியோன், லைபீரியா, கேம்பியா, ஜாம்பியா, ஐவரிகோஸ்ட் மற்றும் டோகோலேண்டிலும், கிழக்கு ஆப்ரிக்காவில் கென்யா, உகாண்டா மற்றும் தான்ஸா-னியாவிலும் அஹ்மதிய்யத் பரவியது.


ஹஸ்ரத் டாக்டர் முஃப்தி முஹம்மது சாதிக் (ரலி)
(1920 -ல் அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்ட முதல் முபல்லிக்)

இவை தவிர தென் ஆப்பிரிக்கா, பாலஸ்தீன், லெபனான், சிரியா, ஏதென், எகிப்து, குவைத், பங்களா-தேஷ், பஹ்ரைன், துபாய், ஃபிஜி, மியன்மார், ஹாங்-காங், சிங்கப்பூர், ஜப்பான், மலேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலும் அஹ்மதிய்யத் வேரூன்றியது. மேலும் ஈரான், ஜோர்டான், எத்தியோப்பியா, சோமாலியா, கான்கோ, சிலி, ருமேனியா, பல்கேரியா, ஹங்கேரி, போலந்து மற்றும் அர்ஜெண்-டினாவிற்கும் மார்க்கப் பிரச்சாரகர்கள் அனுப்பப்பட்டு இஸ்லாத்தின் தூதுச் செய்தி எத்தி வைக்கப்பட்டது. 1924 அக்டோபர் 19-ல் வாக்களிக்-கப்பட்ட சீர்திருத்தவாதி அவர்கள் இலண்டனில் ஐரோப்பாவில் முதல்


மவ்லவி ஹஸ்ரத் அப்துர் ரஹீம் நய்யர் (ரலி)
(1921 -ல் நைஜீரியவிற்கு அனுப்பப்பட்ட முதல் முபல்லிக்)

அஹ்மதிய்யா பள்ளிவாசலான ஃபஸ்ல் பள்ளிவாசலுக்கு அடிக்கல் நாட்டினார்கள். 200 -க்கும் மேற்பட்ட விருந்தினர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதியின் கிலாஃபத் காலத்தின் போது 46 -க்கும் மேற்பட்ட நாடுகளில் அஹ்மதிய்யா ஜமாஅத் புதிதாக வேரூன்றியது.

### திருக்குர்ஆன் மொழியாக்கம்

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கிலாஃபத்தின் போது புதிதாக ஆங்கிலத்தில் திருக்குர்ஆன் மொழியாக்கம் செய்யப்பட்டது. மேலும் டச்சு, டேனிஷ், ஜெர்மன், இந்தோனேஷியன், மலாயி, ரஷ்யன், பிரெஞ்ச், ஸவாஹிலி, லுகாண்டி, ஹிந்தி, உர்து, குர்முகி உள்ளிட்ட பல்வேறு உலக மொழிகளில் திருக்குர்ஆன் மொழியாக்கங்கள் வெளியிடப்பட்டன. மேலும் 12 மொழிகளில் திருக்குர்ஆன் மொழியாக்கம் செய்யப்பட்டு சரிபார்க்கும் பணி நடைபெற்றது.

1961 -ல் ஜலஸாவில் ஹஸ்ரத் வாக்களிக்கப் -பட்ட சீர்திருத்தவாதி அவர்கள் கூறினார்கள்:


இலண்டன் ஃபஸ்ல் பள்ளிவாயில் அடிக்கல் நாட்டு நிகழ்ச்சி

"அல்லாஹ்வின் உதவிகள் மற்றும் அருட் கொடைகளின் மீது நம்பிக்கை வைத்தவனாக நான் இதனை அறிவிக்கின்றேன். எனது பெயர் உலகில் என்றென்றும் பாதுகாக்கப்படும். நான் ஒரு நாளில் மரணித்து விட்டாலும் எனது பெயர் வரலாற்றிலிருந்து ஒருபோதும் அழிந்து விடாது. இது அல்லாஹ்வின் தீர்ப்பாகும்....

இன்றில்லாவிட்டால் ஒரு 40 அல்லது 50 வருடங் -களுக்குப் பிறகு அல்லது ஒரு 100 ஆண்டுகளுக்குப் பிறகு வரலாறு இந்த அறிவிப்பு சரியா தவறா என்பதைத் தானே தீர்மானித்து விடும். சந்தேகத்திற்கிடமின்றி அப்போது நான் இருக்க மாட்டேன். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். எப்போதெல்லாம் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் வரலாறு எழுதப்படுகின்றதோ அப்போது ஒவ்வொரு முஸ்லிம் வரலாற்றாசிரியரும் வரலாற்றில் எனது பெயரைக் குறிப்பிட நிச்சயமாக கடமைப்பட்டவராக இருப்பார். எனது சாதனைகளைக் குறிப்பிடாமல் வரலாறு முழுமை பெறாது."

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களது அசாதாரண செயல்பாடுகள் மற்றும் சாதனைகளைக் குறித்தும் அவற்றின் தொலைநோக்கு தாக்கத்தைப் பற்றியும் முழுமையாக எடுத்துரைப்பது சாத்தியமற்றதே ஆகும். அவர்களே குறிப்பிட்டது போல், பல தலைமுறைகளுக்குப் பிறகு வருபவர்களால் மட்டுமே அவர்களின் சாதனைகளின் முழு பரிமாணத்தைக் குறித்து முழுமையான மதிப்பீடு செய்யப்பட முடியும்.

அல்லாஹ் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் மீது ஆயிரக்கணக்கான அருட்களைப் பொழிவானாக! அன்னாரின் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டே செல்வானாக! ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் போதனைகள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப வாழவும் அன்னாரது அடிச்சுவடுகளைப் பின்தொடரவும் அல்லாஹ் நமக்கு அருள் புரிவானாக! ஆமீன்!

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களால் தொடங்கப்பட்ட திட்டங்களுள் சில....**

| | ஆண்டு |
|---|---|
| தாருல் கஸா (நீதித்துறை) | 1919 |
| மஜ்லிஸே ஷூரா (ஆலோசனை சபை) | 1922 |
| லஜ்னா இமாயில்லாஹ் | 1922 |
| மஜ்லிஸ் நாஸிராத்துல் அஹ்மதிய்யா | 1928 |
| ஜாமிஆ அஹ்மதிய்யா, காதியான் | 1928 |
| தஹ்ரீகே ஜதீது | 1934 |
| மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா | 1938 |
| மஜ்லிஸ் அத்ஃபாலுல் அஹ்மதிய்யா | 1940 |
| மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் | 1940 |
| வக்ஃபே ஜதீது | 1957 |




# திருக்குர்ஆனின் வசனங்கள் நீக்கப்பட்டுள்ளனவா...?

(தஃப்ஸீரே கபீரிலிருந்து.....) 3

**தமிழாக்கம்: மவ்லவி M. முஹம்மது சுல்தான் முஹீயுத்தீன்**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சவால்:



திருக்குர்ஆனின் போதனைகள் அனைத்தும் செயல்படத்தக்கவை ஆகும். ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தமது மரணம் வரை திருக்குர்ஆனின் அனைத்துக் கட்டளைகளையும் பேணி செயல்பட்டவர்களாக இருந்தார்கள். அதன்படி செயல்படுத்தி வந்தார்கள். மேலும் திருக்குர்ஆனும் தெளிவான வார்த்தைகளால், தான் பாதுகாப்பாக இருப்பதற்கான சாட்சியத்தை வழங்குகிறது. இது

اِنَّا نَحۡنُ نَزَّلۡنَا الذِّکۡرَ وَ اِنَّا لَہٗ لَحٰفِظُوۡنَ

நிச்சயமாக இதனை நாம் ஒரு நினைவூட்டலாக இறக்கியுள்ளோம். மேலும் நிச்சயமாக நாமே இதனைப் பாதுகாப்போம் என்று கூறியுள்ளதில் இருந்து நமக்குத் தெரிய வருகிறது. எனவே இந்த சம்பவங்கள் இருக்கும் பட்சத்தில் திருக்குர்ஆனின் சில வசனங்கள் நீக்கப்பட்டு விட்டன என்று சிந்திக்கவும் முடியாது. தற்காலத்தில் உலகில் இருக்கின்ற திருக்குர்ஆனில் ஒரு வசனம் கூட நீக்கப்பட்டது அல்ல. மேலும் அதனை அழிப்பதற்காக யூகித்து ஏதேனும் ஒரு வசனம் நீக்கப்பட்டு விட்டதாக வாதிப்பதற்கு அதில் ஒருபோதும் எவ்வித முரண்பாடும் இருக்கவில்லை. மேலும் அது தனது நிலையில் முழுமையானதாகவும் களங்கமற்றதாகவும் உள்ளது. மேலும் இஸ்லாத்தின் அனைத்து எதிரிகளும் ஒன்று திரண்டு ஒருவேளை அதில் ஏதேனும் ஒரு முரண்பாட்டை நிரூபிக்க நாடினாலும் அது இயலாத ஒன்றாகும். ஒருவேளை அறிவு படைத்த எவரேனும் அல்லது ஜமாஅத்திற்கு எதிராக உள்ள எவரேனும் திருக்குர்ஆனின் முரண்பாட்டை நிரூபிக்க நாடினால் நாம் திருக்குர்ஆனிலிருந்து அதனை மறுத்து விட முடியும் என்பதை நாம் அல்லாஹ்வின் அருளால் சவால் விட்டுக் கூற முடியும்.

இவ்வாறாக இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ளதாவது, அல்லாஹ்வின் தரப்பிலிருந்து கடந்த கால கட்டங்களில் வந்து கொண்டிருந்த தூதுச் செய்தி வரவிருக்கினற தூதுச் செய்தி ஆகிய அனைத்தைப் பற்றியும் நமது ஒரு விதி உள்ளது. அது யாதெனில், சில நேரங்களில் அவை தனது தேவைகளை முழுமைப்படுத்தி விட்டதனால் அதனை அழித்து விட்டு அதற்குப் பதிலாக புதியதோர் அமைப்பு விண்ணிலிருந்து இறங்குவதற்கு தகுந்ததாகி விடுகிறது. மேலும் சில நேரங்களில் மக்கள் அதனை மறக்கடித்து விட்டதனால் மக்களின் அலட்சியத்தால் இறை அமைப்பிற்குப் பதிலாக நிலைபெற்றுள்ள அந்த அமைப்பை திருப்பி அனுப்பி விட்டு பிறகு மீண்டும் அதே முந்தைய இறை அமைப்பை நிலைபெறச் செய்வதற்கான தேவை மட்டுமே ஏற்படுகின்றது. இறை அமைப்பு தனது தேவை நிறைவேறிய பிறகு அழிக்கத் தகுந்ததாகி விடும் போது அல்லாஹ் அதை விடச் சிறந்த அமைப்பை உலகிற்கு அனுப்பி வைக்கின்றான். மேலும் அந்த அமைப்பு சரியானதாக இருந்து மக்கள் அதனை மறக்கடித்து விட்டால் அல்லாஹ் அதே முந்தைய அமைப்பை அதன் வடிவத்திலேயே மீண்டும் உலகில் நிலைபெறச் செய்கின்றான். ஆக, அல்லாஹ்வுக்கு இவ்விரு ஆற்றல்களும் உள்ளன.

# இறைஇருப்பு, இறைஞானத்தைப் பெறுவதற்கான வழிகள்



**2**

மவ்லவி முஹம்மது கரீமுத்தீன் ஷாஹித் சாஹிப்
(சத்ர், சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா, காதியான்)

**தமிழாக்கம்: இப்னு வஸீம், காதியான்**

திருக்குர்ஆன் பல்வேறு இடங்களில் இயற்கையின் வெளிப்பாடுகளை முன் வைத்து அல்லாஹ்வை அறிமுகப்படுத்தியுள்ளது. அதிகாரம் அர் ர.்.து வசனம் 3 மற்றும் 5 -இல் அல்லாஹ் கூறுகிறான்:

اَللّٰهُ الَّذِیۡ رَفَعَ السَّمٰوٰتِ بِغَیۡرِ عَمَدٍ تَرَوۡنَهَا ثُمَّ اسۡتَوٰی عَلَی الۡعَرۡشِ
وَسَخَّرَ الشَّمۡسَ وَالۡقَمَرَ ؕ کُلٌّ یَّجۡرِیۡ لِاَجَلٍ مُّسَمًّی ؕ

பொருள்: “அல்லாஹ் வானங்களை உங்களுடைய கண்களுக்குத் தெரியாத தூண்களின்றி உயர்த்தியவன் ஆவான். அவன் சூரியனையும், சந்திரனையும் உங்களுக்குத் தொண்டாற்றுவதில் ஈடுபடுத்தியுள்ளான். மேலும், விண்கோள்கள் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை தனது வட்டத்தில் தனது சுழற்சிக்கு ஏற்ப இயங்கிக் கொண்டிருக்கிறது.

மேலும், அவனே பூமியைப் பரப்பி, அதில் உறுதியுடன் நிலைநிற்கின்ற மலைகளையும் ஆறுகளையும் அமைத்தான். மேலும் அதில் எல்லா வகைப் பழங்களையும் படைத்தான். மேலும் பூமியில் ஒன்றையொன்று அடுத்துப் பலவகை நிலப்பகுதிகள் உள்ளன. ஒவ்வொரு நிலப்பகுதியின் சிறப்பம்சமும், விளைச்சலும் வெவ்வேறானவையாகும். பலவகையான திராட்சைத் தோட்டங்களும், பலவகைப் பயிர்களும், பலவகையான பேரீச்ச மரங்களும் உள்ளன. இவை அனைத்தும் ஒரே வகைத் தண்ணீரைக் கொண்டே நீர்ப் பாய்ச்சப்படுகின்றன. இவ்வாறிருந்தும் பல்வேறு வகைப் பழங்கள், அவற்றின் சுவை மற்றும் அவற்றின் தாக்கம் ஆகியவை வெவ்வேறாக உள்ளன.”

இந்த அனைத்து விஷயங்களிலிருந்தும் ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு தனித்தனியாக ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தோமேயாயின், இறை வல்லமையின் தனிச்சிறப்பு பெற்ற மேன்மை, சந்தேகமின்றி, மேலான ஆற்றல் பெற்ற ஓர் இருப்பிற்கான சான்றை நமக்குத் தருகிறது. அறிவாளியான மனிதன் ஒருவன் இந்த வல்லமைகளின் வெளிப்பாடுகள் மீது



ஒட்டு மொத்த பார்வையைச் செலுத்தும் போது, கடைசியில், உண்மையான படைப்பாளனை அவன் ஏற்றுக் கொள்ள வேண்டி வருகிறது.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் அவர்கள் என்னே அருமையாகக் கூறியுள்ளார்கள்!

என் அன்பனே!
எங்கும் உன் வல்லமையின் தோற்றம் அற்புதமே!

எத்திசை நோக்கினும்
அது உன்னைக் காணும் வழியே!

ஒவ்வோர் அணுவிலும் நீ சிறப்பினை வைத்துள்ளது
எத்தகு அற்புதம்!

இந்த இரகசியக் கருவூலம் முழுவதையும்
யாரால்தான் கற்க முடியும்?

உன் வல்லமையின் எல்லையை
எவரும் காண முடியாது?

இந்த சிக்கலான கட்டின் முடிச்சை
யாரால்தான் அவிழ்க்க முடியும்?

அல்லாஹ்வைப் பற்றிய ஞானத்தைப் பெறுவ -தற்கும் அவனை அடையாளம் காண்பதற்குமான

ஒருவழிமுறை, இவ்வுலகில் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் அவனது பண்புகளாகும். இத்தகைய பண்புகள் இறைவனைத் தவிர, வேறு எந்தவொரு செயற்கை இறைவனிலும் காணப்படுவது சாத்தியமற்றது. இவ்வனைத்து சிறப்புப் பண்புகளிலும் அவனது ஒரு பண்பு பொருள்களைப் படைப்பவனாக இருப்பதாகும். அதாவது, ஒவ்வொரு பொருளையும் அவனே படைத்துள்ளான். அதில் எவரும் அவனுக்கு இணையாக முடியாது. அதிகாரம் அல் அஹ்கா.ஃ.ப், வசனம் 4 மற்றும் 5 -இல் அல்லாஹ் கூறுகிறான்:

قُلْ اَرَءَيْتُمْ مَّا تَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ اَرُوْنِيْ مَاذَا خَلَقُوْا مِنَ الْاَرْضِ اَمْ لَهُمْ شِرْكٌ فِي السَّمٰوٰتِ

பொருள்: "நாம் வானங்களையும் பூமியையும் அவற்றிற்கு இடையில் இருப்பவற்றையும் வீணாகப் படைக்கவில்லை. அல்லாஹ்வையன்றி மற்றதை அழைப்பவர்களிடம் நீர் கூறுவீராக: நீங்கள் அல்லாஹ்வையன்றி எவர்களை அழைக்கின்றிர்களோ அவர்கள் பூமியில் எதைத்தான் படைத்திருக்கிறார்கள் என்று எனக்குக் காட்டுங்கள். அல்லது வானங்களைப் படைப்பதில் அவர்களுக்கு ஏதேனும் பங்கு உண்டா?"

ஆக, பொருள்களைப் படைப்பதில் வேறு எவரும் கூட அவனுக்கு இணையாக இருக்கிறார்கள் என்றால், அதை அறிவுப்பூர்வமான மற்றும் ஏட்டில் உள்ள ஆதாரங்கள் மூலமாக நிரூபித்துக் காட்டுங்கள் என்று அல்லாஹ்வின் தரப்பிலிருந்து சவால் விடுக்கப்படுகிறது. இவ்வாறே, அதிகாரம் அல் அ.ஃ.ரா.ஃ.ப், வசனம் 55 -இல் கூறுகிறான்:

اِنَّ رَبَّكُمُ اللّٰهُ الَّذِيْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ فِيْ سِتَّةِ اَيَّامٍ ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ يُغْشِي الَّيْلَ النَّهَارَ يَطْلُبُهٗ حَثِيْثًا وَّالشَّمْسَ وَالْقَمَرَ وَالنُّجُوْمَ مُسَخَّرٰتٍ بِاَمْرِهٖ

பொருள்: வானங்களையும் பூமியையும் ஆறு காலக் கட்டங்களில் படைத்தவனே உங்கள் இறைவனாகிய அல்லாஹ் ஆவான். அதற்குப் பிறகு அவன், அதன் அமைப்பை இயக்குவதற்காக உறுதியாக நிலைநின்றான். இரவும் பகலும் வந்து செல்வது, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் ஆகிய அனைத்தும் அவனுடைய கட்டளைக்கேற்ப தத்தமது பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. கவனமாகக் கேளுங்கள்! படைப்பதும் அவன் பணியே! சட்டம் இயற்றுவதும், அந்த சட்டத்தின் கீழ் அனைவரையும் வேலை வாங்குவதும் அவன் பணியே!

இந்தத் திருவசனத்தில் அல்லாஹ்வின் பண்புப் பெயராக, அவன் எல்லாப் பொருள்களின் படைப்பாளியாக இருப்பதோடு, இந்த ஒன்றும் கூட கூறப்பட்டுள்ளது: அதாவது, வானம், பூமி மற்றும் விண்ணில் உள்ள கோள்கள் அனைத்தும் அவனது கட்டளைக்கிணங்க மட்டுமே ஊதியமின்றி மனிதர்களுக்குத் தொண்டாற்றுவதில் ஈடுபட்டுள்ளன.

அவனிடம் ஏன், எதற்கு என்று கேட்க எவருக்கும் துணிச்சல் கிடையாது. எனவே, எல்லாம் வல்ல அல்லாஹ் உலகங்களைப் படைத்தவனாக இருப்பதும், ஒவ்வொன்றின் மீதும் அவனது கட்டளையும் அவனது ஆட்சியும் உறுதியாக இருப்பதும் இறைஞானத்தைப் பெறுவதற்கான ஓர் அற்புதமான வழிமுறையாகும்.

அல்லாஹ்வைக் கண்டறிதல் மற்றும் அவனை அடையாளம் காண்பதற்கான ஒரு வழிமுறை துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதாகும். அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

وَاِذَا سَاَلَكَ عِبَادِيْ عَنِّيْ فَاِنِّيْ قَرِيْبٌ اُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ فَلْيَسْتَجِيْبُوْا لِيْ وَلْيُؤْمِنُوْا بِيْ لَعَلَّهُمْ يَرْشُدُوْنَ

பொருள்: என் அடியார்கள் உம்மிடம் என்னைப் பற்றிக் கேட்டால், நான் (அவர்களுக்கு) அருகில் இருக்கின்றேன். பிரார்த்தனை செய்கிறவர் என்னை அழைக்கின்றபோது, நான் அவருடைய பிரார்த்தனையை ஏற்றுக் கொள்கிறேன். எனவே, அவர்களும் எனது



கட்டளையினை ஏற்றுக் கொண்டு என்னிடம் நம்பிக்கை கொள்ள வேண்டும். இதனால் அவர்கள் நேர்வழி பெறுவார்கள் (என்று பதில் அளிப்பீராக) (2:187)

உலகில் உன்னை அழைத்தும்
பாக்கியமின்றி வெறுங்கையுடன் சென்றவர் எவர்?
பிறகு, நீ அவருக்கு எந்த அளவு
ஆதரவளிப்பவனாக உள்ளாய்.
அவருக்கு நீதான் எல்லாரை விடவும்
அன்பிற்குரியவன்.
நான் உனது அருள்களைப்
பறைசாற்றுபவனாக உள்ளேன்.
என் எதிரிகளை இழிவடையச் செய்த
(இறை)வன் தூயவன்

இவ்வாறே, அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

"துஆ ஒரு வீணான மற்றும் பயனற்ற செயல் என்று அறிவீனன் கருதுகிறான். ஆனால், துஆ ஒன்றின் மூலமாக மட்டுமே கம்பீரமிக்க இறைவன் தேடக் கூடியவர்களுக்குக் காட்சியளிக்கிறான் என்பது (அறிவீனான) அவனுக்குத் தெரியாது. அனல் காதிர் - நான் வல்லமை படைத்தவன் என்ற இறையறிவிப்பை அவர்களின் உள்ளங்களில் போடுகிறான்.

நிச்சய உறுதிக்காகப் பசித்தும் தாகித்தும் இருக்கும் ஒவ்வொருவரும் நினைவில் கொள்ளட்டும், இந்த வாழ்வில் ஆன்மீக ஒளியைத் தேடுபவருக்கு துஆ ஒன்று மட்டுமே வழிமுறையாகும். அதுவே இறையிருப்பிற்கான நிச்சய உறுதியை அளிக்கிறது. மேலும், அனைத்து ஐயப்பாடுகளையும் சந்தேகங்களையும் அகற்றி விடுகிறது."

(நூல்: அய்யமுஸ் ஸுல்ஹ் - பக்கம்:10, ரூஹானி கஸாயின் தொகுதி 14, பக்கம் 239)

இவ்வாறே, ஹுஸூர் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இறைவன் திருக்குர்ஆனில் ஓரிடத்தில் தன்னை அடையாளம் காண்பதற்கான ஓர் அறிகுறியாக, உங்கள் இறைவன் எத்தகைய இறைவன் என்றால், அவன் மனஉளைச்சலுடன் துஆ செய்பவர்களின் துஆவை ஏற்றுக் கொள்கிறான் என்பதைக் கூறியுள்ளான். இது குறித்து அதிகாரம் அந்நம்ல் வசனம் 63 -இல் அல்லாஹ் கூறுகிறான்:

اَمَّنْ يُّجِيْبُ الْمُضْطَرَّ اِذَا دَعَاهُ இறைவன் தனது இருப்பிற்கான அடையாளமாக துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதைக் கூறியிருக்கும் போது, பிறகு, துஆ செய்வதால் அது ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான எந்தத் தெளிவான தடையமும் உருவாவதில்லை என்றும், அது ஒரு சம்பிரதாயம் மட்டுமே ஆகும். அதில் எந்தவோர் ஆன்மீகமும் இல்லை என்றும் அறிவுடைய, வெட்கமுடைய ஒருவன் எவ்வாறு நினைக்க முடியும்?

உண்மையான ஈமானுடைய எவரும் இத்தகைய அவமரியாதையை ஒருபோதும் செய்யமாட்டார் என்பது எனது கருத்தாகும். மேன்மை பொருந்திய அல்லாஹ்வோ இவ்வாறு கூறுகிறான்: எவ்வாறு பூமி மற்றும் வானத்தின் பண்புகள் மீது ஆழ்ந்து கவனம் செலுத்தும் போது உண்மையான இறைவன் அடையாளம் காணப்படுகின்றானோ அவ்வாறே, துஆ ஏற்றுக் கொள்ளப்படுதலைப் பார்க்கும் போது இறைவன் மீது உறுதியான நம்பிக்கை வருகிறது.

(நூல்: அய்யாமுஸ் ஸுல்ஹ் - பக்கம் : 28,29 ரூஹானி கஸாயின் தொகுதி 14, பக்கம் 260)



மேலும், ஹஸ்ரத் முஹம்மத் முஸ்த∴பா (ஸல்) அவர்கள் மூலமாக எந்த ஆன்மீகப் புரட்சி ஏற்பட்டதோ அது பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

"அரேபிய பாலைவனத்தில் ஓர் அற்புதம் நிகழ்ந்ததே! அதாவது, இலட்சக்கணக்கான இறந்தவர்கள் சில நாட்களில் உயிர் பெற்றார்கள். பல தலைமுறைகளாக சீர்கெட்டிருந்தவர்கள் இறை பண்புகளைப் பெற்றார்கள். கண்கள் குருடாய் இருந்தவர்கள் கண்ணொளி பெற்றனர். ஊமைகளின் நாவில் இறைஞானம் பெருக்கெடுத்தது. எக்கண்ணும் கண்டிராத, எக்காதும் கேட்டிராத அத்தகு புரட்சி உலகில் மலர்ந்தது. அது என்னவாக இருந்தது என்பதை நீங்கள் அறிவீர்களா?

அது இறைவனில் தம்மை மாய்த்துக் கொண்ட ஒருவர் இருள் நிறைந்த இரவுகளில் செய்திட்ட துஆக்களே ஆகும். அவை உலகில் ஒரு பேரொலியை எழுப்பி விட்டன. மேலும், கல்வி கற்றிராத, இயலாத, அம்மாமனிதரால் செய்ய முடியாததவையாகத் தென்பட்ட அந்த அற்புதங்களைச் செய்து காட்டின.

اللهم صلّ وسلّم وبارك عليه بعدد همّه وغمّه وحزنه لهذه الامة
وأنزل عليه أنوار رحمتك الى الابد

(அல்லாஹ்வே! அவர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்கள் இந்த (முஸ்லிம்) சமுதாயத்தின் மீது கொண்டிருந்த பரிவு, பற்று, கவலைக்கு ஏற்ப அருட்கொடையையும், சாந்தியையும் வழங்குவாயாக. மேலும், உன் கருணையின் ஒளிகளை என்றென்றும் அவர்கள் மீது இறக்குவாயாக.)

துஆக்களின் தாக்கம் நீரின், நெருப்பின் தாக்கங்களைக் காட்டிலும் அதிகமானது என்பதை நான் எனது சொந்த அனுபவத்தால் காண்கிறேன். இன்னும் கூறுவதாயின், இயல்புக்கான காரணிகளில் துஆவைப் போன்ற மகத்துவமிக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய எந்தப் பொருளும் இல்லை.

(நூல்: பரக்காத்துத் துஆ - பக்கம்: 8, ரூஹானி கஸாயின் தொகுதி 6, பக்கம் 10,11)

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் அவர்கள் தமது நூல்: 'ஹகீக்கத்துல் வஹீ' -இல் 208 அடையாளங்களைக் கூறியுள்ளார்கள். அவை இறை இருப்பிற்கான, அவன் வரை சென்றடைவதற்கான மகத்துவமிக்க வழிமுறைகள் ஆகும். நீங்கள் அந்த நூலைக் கண்டிப்பாகப் படியுங்கள். எல்லா விதமான சஞ்சலங்களும் அகன்று விடும். இன்ஷா அல்லாஹுத் தஆலா.

இந்தக் கருத்தை நிறைவு செய்வதற்கு முன்னதாக நான் இந்தக் காலத்தில் இறைவன் புறமிருந்து அனுப்பப்பட்டவரும் தூதருமான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இரண்டு மேற்கோள்களை உங்கள் முன் வைக்கிறேன்.

ஹுஸூர் (அலை) அவர்கள் தமது நூல் 'நஸீமே த.்.வத்' -இன் பக்கம் 82 -இல் கூறுகிறார்கள்:

"உயிருள்ளவனும் நிலைத்திருப்பவனுமாகிய நம் இறைவன் நம்மிடம் மனிதர்களைப் போன்று உரையாடுகிறான். நாம் ஒரு விஷயத்தைக் கேட்கிறோம் துஆ செய்கிறோம் எனும் போது, அவன் ஆற்றலால் நிரம்பிய சொற்களில் பதில் அளிக்கிறான். இந்தத் தொடர் ஆயிரம் முறை தொடர்ந்துக் கொண்டே இருந்தாலும் சரி, அப்போதும் அவன் பதில் அளிப்பதை விட்டும் முகந்திருப்புவதில்லை. அவன் தனது உரையாடலில் வினோதத்திலும் வினோதமான மறைவான விஷயங்களை வெளிப்படுத்துகிறான். மேலும், வழக்கத்திற்கு அப்பாற்பட்ட வல்லமைகளின் காட்சிகளைக் காட்டுகிறான். எதுவரையெனில், தான் இறைவன் என்று அழைக்கப்பட வேண்டியவன் தான் என்பதை அவன் உறுதியாக நம்ப வைத்து விடுகிறான்."

(நூல்: நஸீமே த.்.வத் - பக்கம்:82, ரூஹானி கஸாயின் தொகுதி 19, பக்கம் 448)

இவ்வாறே,அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

"நம் இறைவனில் எண்ணற்ற அற்புதங்கள் உள்ளன. ஆனால், உண்மை மற்றும் நன்றியுணர்வுடன் அவனுக்காக ஆகிவிட்டவர்கள்தான் அதைப் பார்க்கிறார்கள். அவன் தன்னுடைய ஆற்றல்கள் மீது உறுதியான நம்பிக்கை கொண்டிராத, தனக்கு உண்மையான விசுவாசிகளாக இல்லாத அந்நியர்கள் மீது அந்த அற்புதங்களை வெளிப்படுத்துவதில்லை.


தனக்கு ஓர் இறைவன் இருக்கிறான் அவன் ஒவ்வொன்றின் மீதும் ஆற்றல் படைத்தவன் என்பதை இதுவரை அறிந்திராத மனிதன் எத்துணை துர்பாக்கியசாலி!

நமது சொர்க்கம் நம் இறைவனே. நம்முடைய பேரின்பங்கள் நம் இறைவனிடத்தே உள்ளன. ஏனெனில், நாம் அவனைக் கண்டோம். அழகு அனைத்தும் அவனிடத்தே கண்டோம். இந்தச் செல்வம் உயிரைக் கொடுத்தாயினும் பெறத்தக்கது. ஒருவர் தன்னை முற்றிலும் இழந்தாகிலும் பெறத்தக்கது இம்மாணிக்கம். இழப்பிற்குரியோரே! இந்த நீரூற்றின் பக்கம் விரைந்து வாருங்கள். இது உங்களை வயிறார நீர் அருந்தச் செய்யும். இது உங்களைக் காக்கும் உயிர் ஊற்றாகும்.

நான் என்ன செய்வேன்? எவ்வாறு இந்த நற்செய்தியை உள்ளங்களில் உறையச் செய்வேன்? இதுதான் உங்கள் இறைவன் என்று மக்கள் கேட்பதற்கு தெருக்களிலே எந்த முரசை அறைந்து தெரிவிப்பேன்? மக்கள் கேட்கும் பொருட்டு அவர்கள் காதுகள் திறக்க எந்த மருந்தைக் கொண்டு சிகிச்சைஅளிப்பேன்?"

(நூல்:கிஷ்தீ நூஹ் - பக்கம்: 21,ரூஹானி கஸாயின் தொகுதி 19,பக்கம் 21,22)

வஆகிரு த.்.வானா அனில் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.



★ துஆ ஒரு வீணான மற்றும் பயனற்ற செயல் என்று அறிவீனன் கருதுகிறான். ஆனால் துஆ ஒன்றின் மூலமாக மட்டுமே கம்பீரமிக்க இறைவன், தேடக்கூடியவர்களுக்குக் காட்சி அளிக்கிறான்.

★ அல்லாஹ்வைக் கண்டறிதல் மற்றும் அவனை அடையாளம் காண்பதற்கான ஒரு வழிமுறை துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதாகும்.

– ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)

# சிறுவர் பகுதி

# மார்க்க அறிவுப் புத்தகம்




**தமிழாக்கம்: M.M. இப்ராஹீம்**

## 1. இஸ்லாம்

63. 'ஹதீஸ்' என்பது என்ன?

ஹஸ்ரத் நபி பெருமானார் (ஸல்) அவர்களின் சொல்லும் செயலும் ஹதீஸ் ஆகும்.

64. ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களின் ஹதீஸ்களில் பெரும் பகுதியை நமக்கு அறிவிப்பவர் யார்?

ஆண்களில் ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்களும் பெண்களில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களும் ஆவர்.

65. 'ஸிஹாயி ஸித்தா' என்பது என்ன?

மிகவும் ஆதாரப்பூர்வமான ஆறு ஹதீஸ் புத்தகங்கள் என்பது பொருளாகும்.

66. ஆதாரப்பூர்வமான ஆறு ஹதீது புத்தகங்களையும் அவற்றைத் தொகுத்தவர்களின் பெயர்களையும் கூறுக:

1) ஸஹீஹ் புகாரி

தொகுத்தவர்: இமாம் முஹம்மது பின் இஸ்மாயில் புகாரி (ஹிஜ்ரி 194-256)

2) ஸஹீஹ் முஸ்லிம்

தொகுத்தவர்: இமாம் முஸ்லிம் பின் ஹஜ்ஜாஜ் (ஹிஜ்ரி 204-261)

3) ஜமாயி திர்மிதி

தொகுத்தவர்: இமாம் அபூ மூஸா முஹம்மத் பின் ஈஸா திர்மிதி (ஹிஜ்ரி 209-279)

4) ஸுனன் அபூதாவூது

தொகுத்தவர்: இமாம் அபூதாவூத் சுலைமான் பின் அப்பாஸ் (ஹிஜ்ரி 202-275)

5) ஸுனன் நஸாயீ

தொகுத்தவர்: ஹாபிஸ் அஹ்மத் பின் ஸுஹைப் அந்நஸாயீ (ஹிஜ்ரி 214-303)

6) ஸுனன் இப்னு மாஜா

தொகுத்தவர்: அபூ அப்துல்லாஹ் முஹம்மத் பின் யஸீத் இப்னு மாஜா காஸ்வினி (ஹிஜ்ரி 209-273)

67. நான்கு மத்ஹப்களின் இமாம்களின் பெயர்களைக் கூறுக:

1) இமாம் அபூஹனி∴பா

2) இமாம் ஷா∴பி

3) இமாம் மாலிக்

4) இமாம் அஹ்மத் பின் ஹம்பல்

68. ஹஜ்ரே அஸ்வத் (கறுப்புக்கல்) பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?

இது கஅபாவின் தென்கிழக்கு மூலையில் சுவரின் மேல் வைக்கப்பட்டுள்ள ஒரு மூலைக்கல் ஆகும். இது பூமியிலிருந்து நான்கு அடி உயரத்தில் உள்ளது.




69. மஹ்தியும் மஸீஹும் ஒரே மனிதரே என்று கூறும் ஹதீஸைக் குறிப்பிடுக:

- லா மஹ்தி இல்லா ஈஸா

இதன் பொருள்: "மஸீஹைத் தவிர வேறு மஹ்தி இல்லை" என்பதாகும்.

(ஆதாரம்: இப்னு மாஜா அதிகாரம் ஷித்தத்துஸ் ஸமான்)

70. முஹம்மது நபி (ஸல்) அவர்களுக்குப் பின் நபிமார்கள் வந்து கொண்டிருப்பார்கள் என்பதைக் கூறும் மூன்று ஹதீதுகளைக் கூறுக.

1) இப்ராஹீம் (நபி (ஸல்) அவர்களின் குமாரர்) உயிருடன் இருந்திருந்தால் அவர் நபியாக இருந்திருப்பார். (இப்னுமாஜா தொகுதி 1 கிதாபுல் ஜனாயிஸ்)

2) நம்பிக்கையாளர்களின் தாயாரான ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்: அவர்களைக் காத்தமன் நபிய்யீன் என்று கூறுங்கள். அவர்களுக்குப் பின் நபி இல்லை என்று கூறாதீர்கள்.'' (தப்ஸீர் துர்ரே மன்ஸுர் தொகுதி 6)

3) எனக்குப் பின் தோன்றும் நபிமார்களைத் தவிர்த்து அனைவரிலும் சிறந்தவர் அபூபக்ரே. (கன்ஸுல் உம்மால்)

71. ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஒரு சீர்திருத்தவாதி தோன்றுவார் என்று கூறும் ஹதீதைக் குறிப்பிடுக.

இந்த உம்மத்தைச் சீர்திருத்துவதற்காக ஒவ்வொரு நூற்றாண்டின் ஆரம்பத்திலும் ஒரு சீர்திருத்தவாதியை இறைவன் தொடர்ச்சியாக அனுப்பிக் கொண்டே இருப்பான். அவர் அவர்களுக்கு இஸ்லாத்தின் மெய்ப் பொருளை உணர்த்தி அவர்களைத் தூய்மைப் -படுத்துவார். (ஸுனன் அபூதாவூத் தொகுதி 2)

72. ஆரம்ப கால இறையடியார்களின் நூல்களிலிருந்து பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பின் நபிமார்கள் தோன்றிக் கொண்டேயிருப்பார்கள் என்று உணர்த்தும் மூன்று மேற்கோள்களைக் குறிப்பிடுக:

1) புகழ்பெற்ற ஸ்பானிய சான்றோரும் ஆத்மீக மறை ஞானியுமான ஹஸ்ரத் முஹ்யுத்தீன் இப்னு அரபி அவர்கள் கூறுகிறார்கள்:

இவ்வகையான நபித்துவம் (புதிய ஷரீஅத்தை ஏற்படுத்தாத நபித்துவம்) மனிதன் இவ்வுலகில் வாழும் காலம் வரைநிலைத்திருக்கும். எனினும் புதிய ஷரீஅத்தைக் கொண்டு வரும் நபித்துவம் முடிவுற்று விட்டது. (ஃபுத்தூஹாத்தே மக்கிய்யா பாகம் 2 பக்கம் 100)

2) தாருல் உலூம் தேவ்பந்தின் ஸ்தாபகரான மவ்லானா முஹம்மத் காசீம் நத்வீ அவர்கள் எழுதுகிறார்கள்:

ஹஸ்ரத் பெருமானார் (ஸல்) அவர்களுக்குப் பின்னர் ஒரு நபிதோன்றினால் கூட அது அவர்களின் காத்தமிய்யத்தை சிறிதும் பாதிக்காது. (தஹ்ஸீருன்னாஸ் பக்கம் 25)

3) இமாம் ஷஹ்ரானி அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்களுடன் நபித்துவம் முற்றாக நிறுத்தப்படவில்லை என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். எனினும் ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வரும் நபித்துவம் நிறுத்தப்பட்டுள்ளது. (அல் யவாக்கீத்துவல் ஜவாஹிர் தொகுதி 2 பக்கம் 43)



73. ஒருவர் மஸ்ஜிதுக்குள் நுழையும்போதும் வெளியேறும் போதும் என்ன துஆ செய்ய வேண்டும்?

ஒருவர் மஸ்ஜிதுக்குள் நுழையும்போது:

بِسْمِ اللهِ الصَّلٰوةُ وَالسَّلَامُ عَلٰى رَسُوْلِ اللهِ اَللّٰهُمَّ اغْفِرْلِيْ ذُنُوْبِيْ وَافْتَحْ لِيْ اَبْوَابَ رَحْمَتِكَ

என்று கூற வேண்டும்.

இதன் பொருள்: அல்லாஹ்வின் பெயரால் அவனுடைய தூதர் மீது வாழ்த்துக்களும் சமாதானமும் உண்டாவதாக. அல்லாஹ்வே! என்னுடைய பாவங்களை மன்னித்து என்னை உனது கருணையின் வாயிலில் நுழையச் செய்வாக என்பதாகும்.

மஸ்ஜிதிலிருந்து வெளியேறும் போது:

اَللّٰهُمَّ إِنِّي أَسْئَلُكَ مِنْ فَضْلِكَ

என்று கூற வேண்டும்.

இதன் பொருள்: அல்லாஹ்வே! நான் உன்னுடைய அருட்கொடையை வேண்டுகிறேன் என்பதாகும்.

(தொடரும்...)

# முனா:.பிக்குகள்: நயவஞ்சகத்தை
# அடையாளம் காண்பதும் எதிர்கொள்வதும் எப்படி?

ரிஸ்வான் கான், முபல்லிக், கனக்டிகட், U.S.A.

தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது

*(சென்ற இதழின் தொடர்ச்சி...)*

3. நம்பிக்கைக் கொண்டவர்கள் ஆனால் நயவஞ்சகர் -களின் நண்பர்கள்:

இன்னொரு வகை முனா:.பிக்குகள் யாரென்றால், அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் ஆனால் முனா:.பிக்குகளின் நண்பர்களாக இருப்பவர்கள்.

لَىِٕنْ لَّمْ يَنْتَهِ الْمُنٰفِقُوْنَ وَالَّذِيْنَ فِيْ قُلُوْبِهِمْ مَّرَضٌ وَّالْمُرْجِفُوْنَ
فِي الْمَدِيْنَةِ لَنُغْرِيَنَّكَ بِهِمْ

நயவஞ்சகர்களும், உள்ளத்தில் நோய் உள்ளவர்களும், நகரில் குழப்பம் விளைவித்துக் கொண்டிருப்பவர்களும் தவிர்ந்து கொள்ளவில்லை என்றால், அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க நாம் உமக்கு அதிகாரம் வழங்குவோம். (33:61)

இதுவரை கூறப்பட்ட முனா:.பிக்குகளின் எல்லா வகையினரைக் குறித்தும் இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ளது. 'நயவஞ்சகர்கள்' உள்ளத்தால் நிராகரித்து நம்பிக்கைக் கொண்டுள்ளோம் என்று வாயால் கூறுபவர்கள். 'உள்ளத்தில் நோய் உள்ளவர்கள்' என்பது உள்ளத்தில் நம்பிக்கையையும், ந:.பக்கையும் (நயவஞ்சகத்தையும்) கலந்து விட்டவர் -களைக் குறிப்பிடுகிறது. 'நகரில் குழப்பம் விளைவித்துக் கொண்டிருப்பவர்கள்' என்பது நயவஞ்சகர்களுடன் நட்பு பாராட்டும் நம்பிக்கை கொண்டவர்களைக் குறிக்கிறது.


அல்லாஹ் நயவஞ்சகர்களின் நண்பர்களைக் குறித்து இவ்வாறு கூறுகின்றான்:

الْفِتْنَةَ ۚ وَفِيْكُمْ سَمّٰعُوْنَ لَهُمْ ۗ وَاللّٰهُ عَلِيْمٌۢ بِالظّٰلِمِيْنَ

அவர்களின் செய்திகளை உன்னிப்பாக கேட்பவர்களும் உங்களுள் சிலர் இருக்கின்றனர். அநீதி இழைப்பவர்களை அல்லாஹ் நன்கு அறிகின்றான். (9:47)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் முனா:.பிக்குகளின் நண்பர்களின் பண்புகள் குறித்து இவ்வாறு கூறுகிறார்கள்:

'அவர்கள் முனா:.பிக்குகளின் நோக்கங்களைப் பரப்புகின்றனர். முனா:.பிக், ஜமாஅத் அழிந்து விட்டது என்று கூறுகிறார். அவர் இதனை கிளிப்பிள்ளை போன்று மீண்டும் மீண்டும் கூறுகிறார். எங்கெல்லாம் அவர்



செல்கின்றாரோ அங்கெல்லாம் அவர் இதனைக் கூறுகிறார். அவர் ஒரு நம்பிக்கையாளரே ஆவார். ஆனால் முட்டாளான அறிவீனனான நம்பிக்கையாளர் ஆவார். இந்த நம்பிக்கையாளர் முனா:.பிக்குகளின் கருவி ஆவார். (குத்பாத்தே மஹ்மூது 5, ஆகஸ்டு 1938, பக்கம் 501)

இவர்கள் முனா:.பிக்குகளின் ஒரு தனித்துவமான நோக்கத்திற்காக சேவை செய்கின்றனர். எவ்வாறெனில், முனா:.பிக்குகள் சில சமயம் வேற்றுமைகளைப் பரப்பும் போது அது பலனளிக்காது. ஏனெனில் அவர்களை நம்பிக்கை கொண்டவர்கள் நன்கு அறிவர். அவர்களின் வாடிக்கையே வேற்றுமையை விதைப்பதுவே என்பதுவும் நன்கு தெரியும். இருப்பினும் முனா:.பிக்குகளின் நண்பர்களான அப்பாவி நம்பிக்கையாளர்கள் அதே ஆட்சேபனைகளைக் கண்மூடித்தனமாக மீண்டும் மீண்டும் கூறும்போது முனா:.பிக்குகள் தங்களின் கூற்றுகளுக்கு நியாயம் கற்பிக்க அவற்றைப் பயன்படுத்துகின்றனர். முனா:.பிக்குகள் அவர்களைச் சுட்டிக் காட்டி அவர்கள்

கூறுவது உண்மையாக இருக்க வேண்டும் என்று கூறுகின்றனர். ஏனெனில் இந்த நேர்மையான நம்பிக்கையாளர்கள் அதனை மீண்டும் செய்கின்றார்கள். இவ்வாறு அவர்கள் (முனா∴பிக்குகள்) இந்த முட்டாள் மற்றும் அறியா நம்பிக்கையாளர்களுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு அவர்களை ஒரு கருவியாகப் பயன்டுத்துகிறார்கள்.



ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

இதைத்தான் ஒரு முனா∴பிக் செய்கிறார். அவர்கள் 'மனிதர்களின் உள்ளங்களில் ஊதுகிறார்கள்.' (114:6). அதாவது மக்களின் மனங்களில் தீய எண்ணங்களை உருவாக்கி விட்டுப் பின்னர் மறைந்து கொள்கின்றார்கள். (குத்பாத்தே மஹ்மூது 5 ஆகஸ்டு 1938 பக்கம் 501)

நயவஞ்சகர்களின் இந்த நண்பர்கள் தம்மை நேர்மையாளர்கள் என்றும், தாம் அறிவுப்பூர்வமான செயல்களையே செய்வதாகவும், அமைதியை மேம்படுத்தவே தாங்கள் முயற்சிப்பதாகவும் தம்மைத் தாமே நம்பிக் கொள்கின்றனர். இருப்பினும் அவர்களின் நடவடிக்கைகள் நயவஞ்சகமானவை. இவர்களின் அப்பாவித்தனத்தை நயவஞ்சகர்கள் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். இந்த நம்பிக்கையாளர்கள் தம்மை சீர்திருத்திக் கொள்ளாவிட்டால் முனா∴பிக்குகளுக்கு நேரும் அதேகதியை இவர்களும் சந்திக்க நேரிடும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:

அவர்கள் முனா∴பிக்குகளாக மாறாவிட்டாலும் அவர்கள் சில சமயங்களில் முனா∴பிக்குகளுக்குரிய தண்டனையை அல்லாஹ்விடமிருந்து பெறுகின்றனர். ஏனெனில் அல்லாஹ் கூறுகின்றான்:

وَلَا تَرْكَنُوْٓا اِلَى الَّذِيْنَ ظَلَمُوْا فَتَمَسَّكُمُ النَّارُ

மேலும் அநீதியிழைப்பவர்களின் பக்கம் நீங்கள் சாய்ந்து விடாதீர்கள். அவ்வாறு சாய்ந்து விட்டால் நெருப்பு உங்களைப் பற்றிக்கொள்ளும். (11:114)

அநீதி இழைக்காதவர்கள் சில நேரங்களில் நெருப்பில் வீழ்கின்றனர். அதற்குக் காரணம் அவர்கள் அநீதி இழைப்பவர்களுடன் நட்பு பாராட்டுவதேயாகும் என்று இந்த வசனம் கூறுகிறது. எனவே இவ்வகை முனா∴பிக்குகள் நம்பிக்கையைப் பொறுத்தவரை முனா∴பிக்குகள் அல்ல. மாறாக முனா∴பிக்குகளுடன் நட்பு பாராட்டுவது இவர்களின் பழக்கமாகவும் அவர்-களுடன் சேர்ந்திருப்பது இவர்களின் அடையாளமாகவும் இருப்பதால் இவர்களும் முனா∴பிக்குகளின் ஒரு வகையாகவே கருதப்படுகின்றனர்.

(குத்பாத்தே மஹ்மூது, 5 ஆகஸ்ட, 1938 பக்கம் 501)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்திலும் இத்தகைய நடத்தை இருந்தது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு எதிராக முனா∴பிக்குகள் பரப்பிய வதந்திகளையும் நபி (ஸல்) அவர்களுக்கு எதிரான கருத்து வேறுபாட்டைப் பரப்புவதற்கு அதனை முனா∴பிக்குகள் எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்பதையும் திருக்குர்ஆன் விவரிக்கிறது. முனா∴பிக்குகளால் தொடங்கப்பட்ட இந்த வதந்திகளை மீண்டும் மீண்டும் செய்ததில் சில உண்மையான நம்பிக்கையாளர்களும் பெரும் தவறு செய்தனர். இந்த சம்பவத்திலிருந்து முனா∴பிக்குகளுடன் நட்பு கொள்வதால் ஏற்படும் விளைவுகள் தெளிவாகிறது.

நிச்சயமாக நெருப்பின் ஆழத்தில் இருப்பார்கள் என்று அல்லாஹ் எவர்களைக் குறித்து கூறியுள்ளானோ அவர்களை நண்பர்களாகவும், உதவியாளர்களாகவும் தேர்ந்தெடுத்துக் கொள்வது சிறிய தவறு அல்ல.

எவர்களைக் குறித்து அவர்கள் நெருப்பின் ஆழத்தில் எறியப்படுவார்கள் என்று அல்லாஹ் கூறியுள்ளானோ அந்த அநீதி இழைப்பவர்களின் உதவியாளர்களாக இவர்கள் உள்ளனர். (குத்பாத்தே மஹ்மூது, 5 ஆகஸ்ட, 1938 பக்கம் 504-505)

### முனா∴பிக்குகளிடமிருந்து நாம் விலகிக் கொள்ள வேண்டும்

அநீதி இழைப்பவர்களிடம் அன்புடன் குனிபவர்களை நெருப்பு ஏன் தொடுகிறது? முனா∴பிக்கு-களிடம் அவர்கள் முதலில் எவ்வாறு நட்பு கொண்டார்கள் என்பதில் இந்தக் கேள்விக்கான பதில் உள்ளது.

முனா∴பிக்குகள் தம்முடன் யாரெல்லாம் இருக்கின்-றார்கள் என்பதை தயக்கத்துடன் சோதிக்கின்றார்கள். அவர்கள் கலீ∴பாவுக்கு எதிராக இரு அர்த்தங்கள் இருக்கும் வகையில் ஏதாவது ஒன்றை கூறுவார்கள். எந்த அளவுக்கெனில், அவர்களின் நயவஞ்சகத்திற்காக அவர்களை அழைத்துக் கேட்கும் போது நம்பத்தகுந்த மறுப்புகளைக் கூறி விடுகின்றனர். அவர்கள் கிண்டலாகப் பேசி பின்னர் நகைச்சுவையாக பேசினார்களா இல்லையா என்பதை நமது எதிர்வினையின் அடிப்படையில் முடிவு செய்கிறார்கள். இந்த வகையான கீழ்த்தரமான நடத்தை

சுயமரியாதை கொண்ட எந்த ஒரு நம்பிக்கையாளருக்கும் நிராகரிப்பாளருக்கும் அருவருப்பாக இருக்கும்.

திருக்குர்ஆன் கூறுகிறது:

وَلَتَعۡرِفَنَّهُمۡ فِىۡ لَحۡنِ الۡقَوۡلِ‌ؕ பேசும் விதத்தைக் கொண்டு நீர் அவர்களை அடையாளம் கண்டு கொள்கின்றீர். (47:31)

“ஒரு முனா.ஃபிக் இரண்டு முகங்களைக் கொண்டவர் ஆவார். அவர் ஒருபோதும் நேராகப் பேசுவதில்லை. எப்போதும் தெளிவற்ற சமச்சீரற்ற பேச்சுகளில்தான் ஈடுபடுவார். இதனால் அவரது பேச்சு ஒரு நபருக்கு ஒரு பொருளையும் மற்றொரு நபருக்க மற்றொரு பொருளையும் தெரிவிக்கிறது.” (*English Five Volume Commentary*, 47: 11)



அவர்களின் நயவஞ்சகத்தனம் குறித்து அவர்களிடம் விளக்கம் கேட்டால் அவர்கள் நகைச்சுவை -யாகவே பேசினோம் என்று கூறி விடுவார்கள். முனா.ஃபிக்குகளின் இந்த நடத்தைக் குறித்து அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

وَلَٮِٕنۡ سَاَلۡتَهُمۡ لَيَـقُوۡلُنَّ اِنَّمَا كُنَّا نَخُوۡضُ وَنَلۡعَبُ‌ ؕ
قُلۡ اَبِاللّٰهِ وَ اٰيٰتِهٖ وَرَسُوۡلِهٖ كُنۡتُمۡ تَسۡتَهۡزِءُوۡنَ

நீர் அவர்களிடம் கேட்டால் நாங்கள் கேலியாகவும் விளையாட்டாகவும் தான் பேசிக் கொண்டிருந்தோம் என்றே பதிலளிப்பார்கள். நீர் அவர்களிடம் அல்லாஹ்வையும் அவனது அடையாளங்களையும் அவனது தூதரையுமா நீங்கள் ஏளனம் செய்து கொண்டிருந்தீர்கள் என்று கேட்பீராக. (9:65)

அல்லாஹ்வின் மீதும் அவனது அடையாளங்கள் மீதும் அவனது கலீ.ஃபா மீதும் அவனது ஜமாஅத் மீதும் நமக்கு மரியாதை இருக்கிறதா அல்லது உண்மையில் நாமும் அவர்களைப் போன்றுதானா என்பதை அறிவதற்காக அவர்கள் நமது எதிர்வினையை சோதித்து பார்க்கிறார்கள். அவர்கள் ஒருவரையொருவர் கண்டுபிடிக்க முடியும். ஏனென்றால் அவர்களைப் போன்றவர்களின் கீழ்த்தரமான மற்றும் நயவஞ்சகத் -தன்மையை அவர்களால் அடையாளம் காண முடியும். அவர்கள் ஒருவரோடொருவர் நேசம் கொண்டவர்கள். அல்லாஹ் திருக்குர்ஆனில் அவர்கள் ஒருவரோடொருவர் தொடர்பு கொண்டவர்கள் என்றும் ஒத்தவர்கள் என்றும் கூறுகின்றான்.

اَلۡمُنٰفِقُوۡنَ وَالۡمُنٰفِقٰتُ بَعۡضُهُمۡ مِّنۡۢ بَعۡضٍ‌ۘ

நயவஞ்சகர்களான ஆண்களும் பெண்களும் ஒருவரோடொருவர் தொடர்பு கொண்டவர்கள். (9:67)

அவர்களுடன் ஈர்ப்பு கொண்டவர்கள் அவர்களின் சபைகளில் அமர ஆரம்பித்து பின்னர் படிப்படியாக அவர்களைப் போன்றே ஆகி விடுகிறார்கள். உண்மையான நம்பிக்கையாளர்களை விட்டு விட்டு முனா.ஃபிக்குகளை நண்பர்களாக்கிக் கொள்வது சிறிய தவறல்ல.

நாம் அவர்களின் சபைகளில் அமர்ந்து அல்லாஹ்வையும் அவனது அடையாளங்களையும் அவனது கலீ.ஃபாவையும் அவமதிப்பதைப் பொறுத்துக் கொண்டால் நாம் நமது மரியாதை உணர்வை இழந்து படிப்படியாக அவர்களைப் போன்று ஆகி விடுவோம். இதனைக் குறித்து அல்லாஹ் கூறுகின்றான்:

وَقَدۡ نَزَّلَ عَلَيۡكُمۡ فِى الۡـكِتٰبِ اَنۡ اِذَا سَمِعۡتُمۡ اٰيٰتِ اللّٰهِ يُكۡفَرُ بِهَا وَيُسۡتَهۡزَاُبِهَا
فَلَا تَقۡعُدُوۡا مَعَهُمۡ حَتّٰى يَخُوۡضُوۡا فِىۡ حَدِيۡثٍ غَيۡرِهٖ ‌ۖ اِنَّكُمۡ اِذًا مِّثۡلُهُمۡ‌ ؕ
اِنَّ اللّٰهَ جَامِعُ الۡمُنٰفِقِيۡنَ وَالۡكٰفِرِيۡنَ فِىۡ جَهَـنَّمَ جَمِيۡعَاۨ ۙ

அல்லாஹ்வின் வசனங்களை நிராகரித்து ஏளனம் செய்யப்படுவதை நீங்கள் செவியுற்றால் அவர்கள் அதை விட்டு வேறு பேச்சில் ஈடுபடாத வரை நீங்கள் அவர்களுடன் அமராதீர்கள். நீங்கள் அவ்வாறு இருப்பீர்களாயின் நீங்கள் அவர்களைப் போலவே கருதப்படுவீர்கள் என அல்லாஹ் ஏற்கனவே இவ்வேதத்தில் அறிவித்துள்ளான். நிச்சயமாக அல்லாஹ் நயவஞ்சகர்களையும் நிராகரிப்பவர்களையும் நரகத்தில் ஒன்று சேர்த்து விடுவான். (4:141)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள், முனா.ஃபிக்கத்தை வேரறுப்பது மிகவும் முக்கியமான -தாகும்; இல்லையெனில் கிலா.ஃபத்திற்கான வாக்குறுதிக்கு ஆபத்து ஏற்பட்டு விடும் என்று விளக்கினார்கள்.

ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் கூறியதை அன்னார் மேற்கோள் காட்டினார்கள்:

நீங்கள் குழப்பத்தைப் பரப்பும் நபர்களை உங்கள் வீட்டிற்குள் வருவதற்கு அனுமதிக்கின்றீர்கள். மேலும் அவர்களுடன் உறவாடுகின்றீர்கள். அதனால் இவர்கள்

தைரியமாகி விட்டார்கள். உங்களது இந்த அலட்சியத்தின் விளைவாக கிலா.்.பத் என்னும் அருட்கொடை முடிவுக்கு வந்து முஸ்லிம்களின் ஒற்றுமை சிதறுண்டுபோகும்.' இப்போது பாருங்கள், ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் கூறியதுதான் நடந்தது.

(அன்வாருல் உலூம் தொகுதி 25 பக்கம் 415 -416)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்:

"நீங்கள் முனா.்.பிக்குகளுக்கு ஆதரவாக நின்று அவர்களைக் காப்பாற்ற விரும்புகின்றீர்கள் என்றால் நான் உங்களிடம் கேட்க விரும்புவது, பிளேக் நோயால் மரணித்த எலியை உங்கள் வீடுகளில் வைத்துக் கொள்ள நீங்கள் விரும்புவீர்களா? அவ்வாறாயின் நீங்கள் நேர்மையானவர்களே என்பதை நான் அறிந்து கொள்வேன்." (குத்பாத்தே மஹ்மூது 16, அக்டோபர் 1936 பக்கம் 681)

இந்த ஒப்புமை பொருத்தமானது. ஏற்கனவே குறிப்பிட்டது போன்று இந்த வார்த்தையின் மூலப்பொருள் மண்ணில் உள்ள ஒரு பொந்து, அதற்கு இரண்டு திறந்த முனைகள் உள்ளன. அதில் நுழைந்த பின்னர் எலி ஒரு முனையை அடைத்து விட்டு மற்றொரு முனையை திறந்ததாகவே விட்டு விடுகிறது. நாம் நமது உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுகின்றோம். எனவே பிளேக் நோயால் இறந்த ஓர் எலியை நமது வீட்டில் நாம் கண்டால், நமது வீட்டில் நோய் பரவி விடக் கூடாது என்று நாம் விரும்புவதால், அதனை உடனே வெளியில் தூக்கி எறிந்து விடுவோம். இவ்வாறே, ஆன்மீக ஆரோக்கியத்தைக் கருத்தில் கொண்டு ஒரு முனா.்.பிக்கைக் கண்டால் அவர்களின நோயிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ள அதனையே செய்ய வேண்டும்.



ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

"முனா.்.பிக்குகளை உறவினர்கள் அல்லது அன்பிற்குரியவர்கள் என்பதற்காக சந்திப்பவர்களிடம் ஒரு தீர்க்கமான வாதத்தை முன்வைக்க விரும்பு-கின்றேன். அதன் பின்னர் அவர்களே பொறுப்பாளி ஆவார்கள். நான் அவர்களிடம் கூறுகின்றேன். நிச்சயமாக அவர்கள் இறைவனால் பிடிக்கப்படுவார்கள். நீங்கள் இறைவனையும் அவனது மார்க்கத்தையும் ஒரு விளையாட்டு பொம்மையாக்கியுள்ளீர்கள். ஆனால் உங்களது தந்திரமும் அகம்பாவமும் இறைவனுக்கு முன்னால் உங்களுக்கு எதற்கும் உதவாது. முனா.்.பிக்குகளைத் தமது செயல்களாலும் நடத்தை-யாலும் எவர்கள் ஊக்குவிக்கின்றார்களோ அவர்கள் கவனமாகக் கேட்க வேண்டும். அல்லாஹ் அவர்களை இம்மையில் நமது கண்களுக்கு முன்னால் இழிவுபடுத்துவான். மறுமையில் அல்லாஹ் அவர்களை தனது முன்னிலையில் இழிவுபடுத்துவான். எனவே பகைவர்களையும் முனா.்.பிக்குகளையும் தவிர்த்து விடுங்கள். அவர்கள் நயவஞ்சகத்தனமான ஏதாவது ஒன்றை கூறினால் அவர்களை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்.

எவராவது பொதுவாக மக்கள் மத்தியில் ஜமாஅத்தைக் குறித்து குறை கூறினால் அவர் ஒரு முனா.்.பிக் என்பதை அறிந்து கொள்ளுங்கள். 'லா ஹவ்ல...' ஓதியவாறே அவரை விட்டும் விலகிச் செல்லுங்கள்." (அன்வாருல் உலூம் தொகுதி 14 பக்கம் 23)

முனா.்.பிக்குகளின் சபையில் அமர்ந்து அல்லாஹ்வின் அடையாளங்கள் அவமதிக்கப்படுவதைக் கேட்டுக் கொண்டிருப்பவர்களும் அதற்கு உடந்தையாக உள்ளனர். ஏனெனில் அவர்களின் அமைதியான தார்மீகமான ஆதரவே முனா.்.பிக்குகளை தமது செயல்களில் மேலும் மேலும் தைரியமானவர்களாக ஆக்குகிறது. ஒரு நம்பிக்கையாளருக்குரிய துணிச்சலுடன் அவர்கள் முனா.்.பிக்குகளின் நயவஞ்சகத்தைச் சுட்டிக் காட்டினால் அந்த முனா.்.பிக்குகள் அவர்கள் முன் மீண்டும் தலை தூக்க தைரியம் கொள்ள மாட்டார்கள்.

### முனா.்.பிக்குகள் வெளியேறுவதால் ஜமாஅத்திற்கு நஷ்டமில்லை; நன்மையே!

முனா.்.பிக்குகள் இருப்பது ஒரு தொந்தரவே ஆகும். அவர்கள் வெளியேறினால் அது நிம்மதியே ஆகும். அல்லாஹ் கூறுகின்றான்:

لَوْ خَرَجُوْا فِيْكُمْ مَّا زَادُوْكُمْ اِلَّا خَبَالًا وَّ لَاْ اَوْضَعُوْا خِلٰلَكُمْ يَبْغُوْنَكُمُ الْفِتْنَةَ

'அவர்கள் உங்களுடன் இணைந்து புறப்பட்-டிருப்பார்களாயின் தீமையைத் தவிர உங்களுக்குச் சிறிதும் உதவி செய்திருக்க மாட்டார்கள். அவர்கள் உங்களுக்கிடையே (குழப்பத்தை உருவாக்க) சுற்றித் திரிகின்றனர். உங்களுக்குள் குழப்பத்தை உருவாக்க விரும்புகின்றனர்.' (9:47)

இஸ்லாத்தில் தரம்தான் முக்கியமே தவிர அளவு அல்ல. உஹதுப் போருக்கு முன்னதாக முனா.்.பிக்குகள் நபி (ஸல்) அவர்களிடமிருந்து பிரிந்து சென்றபோது அது முஸ்லிம்களுக்கு இழப்பையா ஏற்படுத்தியது? போரில் முஸ்லிம்களுடன் முன்வரிசையில் நின்று அவர்கள் தமது உயிரைப் பணயம் வைத்திருப்பார்களா? நிச்சயமாக அவ்வாறு நடந்திருக்காது. அவர்கள் இருந்திருந்தால்

இன்னும் சிக்கலையே அது ஏற்படுத்தியிருக்கும். உஹுதுப் போருக்கப் பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மக்கத்துப் படையினைப் பின்தொடர்ந்த போது தம்முடன் உஹுதுப் போரில் காலந்து கொண்ட உண்மையான நம்பிக்கையாளர்களுக்கு மட்டுமே தம்முடன் வருவதற்கு அனுமதி தந்தார்கள்.

“இறை அமைப்புகளின் வலிமை எண்ணிக்கையில் இல்லை. அவர்களின் வலிமை அவர்களின் நம்பிக்கை மற்றும் நேர்மையில் உள்ளது.” (குத்பாத்தே மஹ்மூது 16 அக்டோபர் 1936 பக்கம் 668)

முனா∴பிக்குகளால் அதிகமாகும் எண்ணிக்கை -யால் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்கு எந்த மதிப்பும் இல்லை. மாறாக அது இடையூறுக்குக் காரணமாகவே இருக்கிறது.

ஒரு முனா∴பிக் உள்ளிருந்து கொண்டு கலீ∴பாவை குறைமதிப்பீடு செய்கிறார் மேலும் அவரது செயல்கள் ஜமாஅத்திற்கு தீங்கு விளைவிக்கிறது என்றால், பின்னர் நாம் முனா∴பிக் மீது கருணை செய்ய வேண்டுமா அல்லது ஜமாஅத்தின் மீது கருணை செய்ய வேண்டுமா என்பதை முடிவு செய்ய வேண்டும். ஒரு முனா∴பிற்கிற்காக கருணயை வேண்டுவதன் மூலமாக கலீ∴பா மற்றும் ஜமாஅத்தின் மீதான நமது கருணையை நாம் தடுத்துக் கொள்கிறோம்.

ஹஸ்ரத் முஸலிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறினார்கள்:

களைகளை விட்டு வைப்பது தோட்டத்திற்குச் செய்யும் கருணை அல்ல. அவை செழிக்க வேண்டிய பயிர்களை மூச்சுத் திணற வைக்கும். (குத்பாத்தே மஹ்மூது, 1 நவம்பர் 1949 பக்கம் 390)

அதிக உழைப்பில் பயிரிடப்பட்டு விளைந்த வயலில் சில களைகளும் வெட்டி எறியப்பட வேண்டியவை என்பதுதான் உண்மை. இயற்கை விதியும் அப்படித்தான். நமது ஜமாஅத்தும் அதற்கு விதிவிலக்கல்ல. (எஸ்ஸென்ஸ் ஆ∴ப் இஸ்லாம் தொகுதி 4 பக்கம் 252)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

“முனா∴பிக்குகள் தாமாகவே ஜமாஅத்தை விட்டும் பிரிந்து செல்வது எந்த விதத்திலும் ஜமாஅத்திற்கு இழப்பை ஏற்படுத்தாது. மாறாக அது அளவற்ற முன்னேற்றத்திற்கே வழிகோலும்.” (குத்பாத்தே மஹ்முது 16 அக்டோபர் 1936 பக்கம் 685)

“உங்கள் அறிவைப் பயன்படுத்துங்கள். பின்னர் துஆவுடன் இறைவன் பக்கம் திரும்புங்கள். பின்னர் தைரியத்துடனும், துணிவுடனும் செயல்படுங்கள். கோழைத்தனத்தையும் பயத்தையும் விட்டு விடுங்கள். பத்தாயிரம் இருபதாயிரம் பேரை இழப்பது உங்களுக்கு இழப்பை ஏற்படுத்தும் என்று நினைக்காதீர்கள். ஒரு மில்லியன் மக்கள் பிரிந்து சென்றாலும் பத்து மில்லியன் பேர் நம்மிடம் வருவார்கள். அவர்கள் நேர்மையாளர் -களாக நம்முடன் சேர்வார்கள்.” (குத்பாத்தே மஹ்மூது, 16 அக்டோபர் 1936 பக்கம் 682)

### முனா∴பிக்குகள் எவ்வாறு கையாளப்பட வேண்டும்?


ஆரம்பத்தில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு வருவோம். எதனால் ஒருவர் முனா∴பிக் ஆகிறார்? நாம் அவர்களைச் சுட்டிக் காட்ட முடியுமா? நாம் அவர்களைச் சுட்டிக் காட்ட வேண்டுமா?

முனா∴பிக் என்பவர் யார் என்பதையும் முனா∴பிக்கத்தை அடையாளம் காண்பதும் அதை வேரறுப்பதும் எந்த அளவு முக்கியத்துவமானது என்பதையும் நாம் அறிந்து கொண்டோம். ஆனால் முனா∴பிக்குகளைச் சுட்டிக் காட்ட வேண்டுமா? இவ்விஷயத்தில் சஹாபிகளின் பொதுவான வழிமுறை எதுவாக இருந்தது என்றால் அவர்கள் முனா∴பிக்குகளை அறிந்து வைத்திருந்தாலும் அவர்கள் தம்மை நம்பிக்கையாளர்கள் என்று கூறிக்கொண்டிருக்கும் வரை அவர்களை முனா∴பிக் என்று பகிரங்கமாக முத்திரை குத்துவதற்குத் தயங்கினார்கள். முனா∴பிக்கத்தான நடத்தை வெளிப்படுவதைப் பார்த்தால் அதனை சஹாபிகள் சுட்டிக் காட்டுவார்கள். மேலும் அதனை நபி (ஸல்) அவர்களிடம் தெரிவித்து விடுவார்கள். அவர் தமது சொந்த உறவினராக இருந்தாலும் சரியே.

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

- ☛ களைகளை விட்டு வைப்பது தோட்டத்திற்குச் செய்யும் கருணை அல்ல. அவை செழிக்க வேண்டிய பயிர்களை மூச்சுத் திணற வைக்கும்.
- ☛ அதிக உழைப்பில் பயிரிடப்பட்டு விளைந்த வயலில் சில களைகளும் வெட்டி எறியப்பட வேண்டியவை என்பது உண்மைதான். இயற்கை விதியும் அப்படித்தான். நமது ஜமாஅத்தும் அதற்கு விதிவிலக்கல்ல.
- ☛ முனாஃபிக்குகள் தாமாகவே ஜமாஅத்தை விட்டும் பிரிந்து செல்வது எந்த விதத்திலும் ஜமாஅத்திற்கு இழப்பை ஏற்படுத்தாது. மாறாக, அது அளவற்ற முன்னேற்றத்திற்கே வழிகோலும்.

– – ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) – –



# ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாறு

14

## - மவ்லானா அப்துர் ரஹீம் தர்து (ரலி) -

தமிழாக்கம்: S.S.H. முஹம்மது லெப்பை

### ஹோஷ்யார்பூர் பயணம்

1884 ஆம் ஆண்டு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் குர்தாஸ்பூர் மாவட்டத்திலுள்ள ஸோஜன்பூர் என்ற கிராமத்திற்குச் செல்ல எண்ணினார்கள். அங்கு சென்று 40 நாட்கள் தனிமையில் தியானத்திலும், பிரார்த்தனையிலும் ஈடுபட்டுப் பின்னர் இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்ய எண்ணியிருந்தார்கள். இந்தப் பயணத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுடன் செல்லத் தம்மை அனுமதிக்குமாறு அப்துல்லாஹ் சனோரி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். காலம் கடந்து கொண்டே இருந்தது. ஆனால் தாம் எந்த இடத்திற்குச் செல்ல வேண்டும் என்பதில் ஒரு இறை வழிகாட்டலை எதிர்பார்த்து ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் காத்திருந்தார்கள். கடைசியாக 1886 –ஆம் ஆண்டு அவர்கள் தாம் விரும்பியதை ஹோஷியார்பூரில் பெற்றுக் கொள்வார்கள் என்ற இறை அறிவிப்பினைப் பெற்றார்கள். எனவே இந்த இறையறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஹோஷியார்பூருக்குச் செல்ல முடிவு செய்தார்கள்.

ஹோஷ்யார்பூரில் தாம் இரண்டு மாதம் தங்க இருப்பதாகவும், அதற்காக ஊருக்கு வெளியே ஓர் இரண்டு மாடிக் கட்டடத்திற்கான ஏற்பாடு செய்ய முடியுமா எனக் கேட்டு ஹோஷ்யார்பூரைச் சேர்ந்த பிரபல முஸ்லிமான சவுத்ரி மெஹர் அலி என்பவருக்கு எழுதிக் கேட்டிருந்தார்கள். சவுத்ரி மெஹர் அலிக்குச் சொந்தமான ஒரு வீடு இருந்தது. அந்த வீடு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் தேவைகளை நிறைவேற்றக் கூடியதாக இருந்தது. அந்த வீட்டை அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தங்குவதற்காக ஏற்பாடு செய்தார். மேலும் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தார்.

1886 –ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20 –ஆம் தேதி அல்லது 21 –ஆம் தேதியில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு குதிரை வண்டியில் ஹோஷ்யார்பூருக்குப் பயணமானார்கள். அவர்களோடு அப்துல்லாஹ் சனோரி (ரலி), சவுத்ரி ஹாமிது அலீ (ரலி), ஹோஷ்யார்பூர் மாவட்டத்திலுள்ள டாண்டா என்ற ஊருக்கு அருகிலுள்ள கிராமமான ரஸூல்பூரைச் சேர்ந்த ஃபத்ஹே கான் ஆகியோர் சென்றனர். பழங்கால முறையில் வடிவமைக்கப்பட்ட ஒரு படகில் அவர்கள் பியாஸ் நதியைக் கடந்தனர்.

அப்போது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள், 'இறை நெருக்கம் பெற்ற மனிதரோடு சேர்ந்திருப்பது ஓர் ஆற்றின் குறுக்கே பயணம் செய்வதைப் போன்றதாகும். பாதுகாப்பாக மறுகரை போய்ச் சென்றடைவோம் என்ற நம்பிக்கையும் உண்டு; அதே நேரத்தில் மூழ்கிவிடும் அபாயமும் உண்டு' என்று குறிப்பிட்டார்கள். அப்போது அவர்களோடு இருந்த மூவரில் ஒருவரான ஃபத்ஹே கான் விஷயத்தில் இது உண்மையாயிற்று. அவர் பிற்காலத்தில் அன்னாரை விட்டுப் பிரிந்து அதன் மூலம் ஆன்மீகமான விதத்தில் மூழ்கிப்போனார்.



ஹோஷ்யார்பூர் மணிக்கூண்டு

அந்தக் குழு இரவில் ரஸூல்பூரில் தங்கியது. 1886 –ஆம் ஆண்டு ஜனவரி 22 –ஆம் நாள் வெள்ளிக்கிழமை ஹோஷ்யார்பூரைச் சென்றடைந்தனர். அந்த மாடி வீட்டின் மேல் தளத்தில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தங்கினார்கள். தம்மோடு வந்த மக்களில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியான பணிகளை வழங்கினார்கள். அப்துல்லாஹ் சனோரி (ரலி) அவர்களுக்கு, ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களுக்கான உணவைத் தயாரித்துப் பரிமாறு பணி வழங்கப்பட்டது. பிற வீட்டு வேலைகளைச் செய்யும் பணியும், விருந்தினர்களைக் கவனித்துக் கொள்ளும் பணியும் சவுத்ரி ஹாமிது அலீ அவர்களிடம்

ஒப்படைக்கப்பட்டது. கடைகளுக்குச் சென்று பொருள்களை வாங்கி வரும் வேலை ஃபத்ஹே கானிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதன் பிறகு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அடுத்து வரும் 40 நாட்களுக்கு யாரையும் சந்திக்க மாட்டார்கள் என்று ஒரு பிரசுரம் மூலம் தெரிவிக்கப்பட்டது. யாரும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைச் சந்திக்க வேண்டாம் என்றும், அவர்களை யாரும் அழைக்கவும் வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டது. அந்தக் குறிப்பிட்ட காலம் முடிந்த பின்னரும் தாம் மேலும் 20 நாட்கள் அங்கேயே தங்கவிருப்பதாகவும், அப்போது அவர்கள் விருந்தினர்களைச் சந்திக்க விருப்பதாகவும் அறிவித்திருந்தார்கள். முன் வாசல் எப்பொழுதும் தாளிடப்பட்டே இருக்க வேண்டும் என்றும், அவர்களின் தோழர் கூட அவர்களின் தனிமைக்கு இடையூறு செய்ய வேண்டாம் என்றும் உறுதியாகக் கேட்டுக் கொண்டார்கள். மாடியிலுள்ள அறைக்கு யாரும் அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்வதற்குக் கூட அதிகமாக பேசக் கூட அனுமதிக்கப்படவில்லை. அன்னாரின் உணவைக் கூட மாடியறையில் வைத்து விட்டுச் செல்லும்படிக் கூறப்பட்டது.

அவர்களுக்கு உணவு பரிமாறக் கூட யாரும் இருக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்பட்டது. அவர்கள் உணவருந்தி முடிந்ததும் பாத்திரங்கள் எடுத்துச் செல்லப்படுமாறு ஏற்பாடு செய்யப்பட்டது. அன்னார் (அலை) தமது தொழுகையைக் கூட மாடியில் இருந்த அறையில் தனியாகத் தொழுது கொண்டார்கள். அவர்களின் அறிவுறுத்தல்கள் உறுதியாகக் கடைபிடிக்கப்பட்டன. அவர்கள் எந்தத் தொந்தரவும் இன்றித் தம் இறைவனோடு இருக்கும்படி விடப்பட்டார்கள். வெள்ளிக்கிழமைகளில் அவர்கள் கீழே இறங்கி வருவார்கள். ஊருக்கு வெளியே ஒரு பூங்காவில் அமைந்திருந்த பள்ளிவாசலுக்குத் தம் குழுவினருடன் சென்றார்கள். அங்கு நடைபெற்ற ஜுமுஆ தொழுகையை இமாமாக நின்று நிறைவேற்றினார்கள். தமக்கு வந்த கடிதங்களைப் படித்தார்கள்; பத்திரிகைகளை வாசித்தார்கள்.

உலகியல் சிந்தனைகளில் மூழ்கி தமது ஆன்மீக உணர்வை இழந்த மேற்கத்திய நாட்டினருக்கு வேண்டுமானால் இது போன்ற நெடுநாட்கள் மேற்கொள்ளப்படும் தனிமை தியானம் இயற்றைக்கு மாறானதாகவும், தேவையற்றதாகவும் தோற்றமளிக்கலாம். ஆனால் ஓர் இறை ஞானியைப் பொருத்த வரையில் இது ஆற்றலின் ஊற்றுக் கண் ஆகும். அதன் மூலம் அவர் வழிகாட்டலைப் பெறுகிறார். அவர் தம்மைச் சூழ்ந்துள்ள இருள் நிறைந்த சக்திகளை வெற்றி கொள்வதற்கு அவர் பெறும் ஆற்றலின் அளவு, அவர் தமது இறைவனோடு ஏற்படுத்திக் கொள்ளும் நெருக்கத்தைப் பொருத்தே அமைகிறது. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைப் பொருத்தவரையில், தம் மீது தமக்கு எந்த ஆற்றலுமில்லை என்று கருதும் நிலையை எய்தி விட்டார்கள். அவர்களுடைய அசைவுகள் அனைத்தும் இறைவனின் கட்டுப்பாட்டில் அமைந்திருந்தன. அவர்கள் ஹோஷ்யார்பூருக்குச் செல்லும்படி குறிப்பான இறை கட்டளையைப் பெற்றார்கள். அங்கிருந்து முன்ஷீ ருஸ்தம் அலீ



ஹோஷ்யார்பூரில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தங்கியிருந்த அறை

என்பவருக்கு 11.02.1886 அன்று எழுதிய ஒரு கடிதத்தில் தாம் எத்தனை நாள் அங்கிருப்பேன் என்பது கூடத் தம்மால் கூற முடியாது என்று குறிப்பிட்டார்கள். எந்த வழியாக காதியானுக்கு திரும்பி வருவார்கள் என்பதையும் அவர்களால் கூற முடியவில்லை. எல்லாம் இறைவன் கையில் இருக்கிறது என்று அவர்கள் கூறினார்கள். இதுதான் உண்மையான இஸ்லாத்தின் பொருளாகும்! முற்றிலுமாக இறை விருப்பத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பதாகும். இப்படிப்பட்ட முழுமையான கட்டுப்படுதலின் மூலம் தான் விண்ணில் நடைபெறும் இறைவனின் ஆட்சி பூமியிலும் ஏற்பட முடியும். மற்றபடி, ஞாயிறு அல்லது வெள்ளிக்கிழமைகளில் சில மந்திரங்களை முணுமுணுப்பதன் மூலம் அல்ல.

மாடியில் உள்ள அறையில் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பது எவருக்கும் தெரியாது. அப்துல்லாஹ் சனோரி அவர்கள் அன்னாருக்கான உணவை எடுத்துச் செல்வார்கள். அன்னார் அனுபவித்து வரும் ஆன்மீக அனுபவங்களை ஓரிரு முறை தம்மிடம் விவரித்ததாக அவர் கூறுகிறார். அவர்கள் எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நெருக்கத்தை அனுபவித்து வந்தார்கள். அல்லாஹ் அவர்களோடு நீண்ட நேரம் உரையாடினான். விண்ணிலுள்ள தம் தந்தையோடு நீண்ட உரையாடல்களை மேற்கொண்டார்கள். அவனது

அன்பையும் பாசத்தையும் வெளிப்படுத்தக்கூடிய அற்புதமான அனுபவங்களைப் பெற்றார்கள். இவை வெளி உலகத்திற்கு எடுத்துக் கூற முடியாத அளவுக்கு ஆழமானவையாகவும், நெருக்க –மானவையாகவும் இருந்தன. ஒருமுறை அவர்கள் அப்துல்லாஹ் சனோரி அவர்களிடம் தமக்குப் பின்வரும் இறையறிவிப்புக் கிடைத்தாகக் கூறினார்கள்.


மியான் அப்துல்லாஹ் பட்வாரி சனோரி சாஹிப்

பூரிக்க மன்ஃபீஹா வமன் ஹவ்லஹா. (பொருள்: இதில் இருப்பவரும் இதைச் சுற்றி இருப்பவரும் அருள் பாலிக்கப்பட்டவர்களே!)

இதற்கு விளக்கமாக அவர்கள் இந்த இறையறிவிப்பின் முதல் பகுதி தம்மைக் குறிப்பதாகவும், அதன் இரண்டாம் பகுதி அப்போது அவர்களோடு அங்கிருந்த தோழர்களைக் குறிக்கும் என்று கூறினார்கள். ஃபத்தேஹ் கான் ஏதோ சிறு வேலையின் காரணமாக வெளியே சென்றிருந்ததால் அந்நேரம் அவர் அங்கிருக்கவில்லை.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்த உலகிற்கு இறைவனின் தூதுவராக நியமிக்கப்பட இருப்பதற்கான ஓர் ஆயத்தமாகவே இந்த சில்லா அமைந்திருந்ததாக பின்னர் நடந்த நிகழ்வுகளிலிருந்து தெரிய வருகிறது. அன்னாரின் தகுதிகள் ஆயத்தமாக்கப்பட்டன. மேலான ஆற்றல் மிக்க வல்லோனின் தரிசனம் வழங்கப்பட்டது. அது 1886 –ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20 –ஆம் தேதி வெளியிடப்பட்ட ஒரு பிரசுரத்தின் மூலம் உலகிற்கு அறிவிக்கப்பட்டது.

## முரளீதருடன் நடைபெற்ற விவாதம்

இறை நெருக்கத்தைப் பெற்ற இந்த நாட்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அங்கேயே பெரும் எண்ணிக்கையிலான மக்களைச் சந்தித்தார்கள். பல நண்பர்கள், பழகிய மக்கள் ஆகியோரின் அழைப்புகளை ஏற்றுக் கொண்டார்கள். அக்காலத்தில் அன்னாருக்கும் முரளீதர் என்பாருக்கும் இடையில் மார்க்க ரீதியான விவாதம் நடைபெற்றது. இந்த விவாதத்தைப் பற்றிய விபரமான குறிப்பை அன்னார் (அலை) அவர்கள் எழுதிய 'சுர்மா சஷ்மயே ஆரியா' என்ற நூலில் காணலாம்.

முரளீதர் என்பவர் ஹோஷ்யார்பூரைச் சேர்ந்த ஒரு முக்கியமான ஆர்ய சமாஜி ஆவார். அவர் அங்குள்ள பள்ளி ஒன்றில் வரைபடக் கலை ஆசிரியராக இருந்தார். 1886 –ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஒரு நாள் அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களைக் காண வந்தார். அப்போது அவர் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களிடம் இஸ்லாத்தைப் பற்றிச் சில கேள்விகள் கேட்க விருப்பம் தெரிவித்தார். அந்த ஆர்ய சமாஜி உண்மையை அறிந்து கொள்வதில் நாட்டமில்லாதவராக இருந்த போதிலும், கருத்து மோதலை உருவாக்க முயன்ற போதிலும் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் அவருடைய சவாலை ஏற்றுக் கொண்டார்கள்.

1886 –ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 –ஆம் நாள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தங்கியிருந்த வீட்டில் இந்த விவாதம் நடைபெற்றது. முரளீதர் விவாதத்தை துவங்கும் போதே ஷக்குல் கமர் என்று அறியப்படும் சந்திரன் பிளவுபட்ட நிகழ்வைத் தாக்கிப் பேச ஆரம்பித்து விட்டார். இந்த விவாதத்தில் ஒவ்வொரு தரப்பும் எழுத்து வடிவான இரு கட்டுரைகளைப் பரிமாறிக் கொள்ள வேண்டும் என்பது நிபந்தனையாக இருந்தது. அந்த விவாதக் கட்டுரைகள் அங்கேயே அப்போதே எழுதப்பட்டு ஒரு பொதுக் கூட்டத்தில் படிக்கப்பட வேண்டும் என்பது ஏற்பாடு. ஆனால் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எழுதி வாசித்த இறுதிக் கட்டுரையைக் கேட்காமலேயே முரளீதர் அவ்விடத்தை விட்டுச் சென்று விட்டார். நேரம் மிகவும் அதிகமாகி விட்டதால் தம்மால் அதற்கு மேல் அங்கு தங்க முடியாது என்ற நொண்டிச் சாக்கைச் சொல்லி விட்டு அவர் கூட்டத்தை விட்டு வெளியேறி விட்டார்.

பார்வையாளர்களில் ஒருவராகக் கலந்து கொண்ட ஷத்ரு கான் என்பவர் பலமுறை வற்புறுத்திக் கேட்டுக் கொண்டும் முரளீதர் கேட்க மறுத்து விட்டார். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் சிலரது பெயர்கள் கீழே தரப்படுகின்றன:

சுகெட் பகுதியின் ஆட்சியாளரான ராஜா ருத்தர் சிங் என்பவரின் மூத்த மகனான ஷத்ரு கான், சுகெட் ராஜாவின் இளைய மகனான ஷத்ரன் ஜீ, ராஜாவின் மற்றொரு மகனான ஜன்மீ ஜீ, பிரதி எடுக்கும் பணியில் இருந்து வந்த மூல் ராஜ், லூதியானாவைச் சேர்ந்த தலைமையாசிரியரான இலட்சுமணன், ஹோஷ்யார்பூரைச் சேர்ந்த ஆசிரியரான பாபு ஹர் கிஷன் தாஸ் ஆகியோர்.

இரண்டாவது கூட்டம் 1886 –ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14 –ஆம் நாள் சவுத்ரி மெஹர் அலீ அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. இது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஆரம்பிக்க வேண்டிய முறை. ஆனால் முரளீதர் அன்னாரை ஆரம்பிக்க விடவில்லை. ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது முதல் நாள் வாதத்தில், 'மனித ஆன்மாக்கள் காய்கனிகளின் மீது பனித் துளிகளாகப் படிகின்றன; அவற்றை உண்ணும் பெண்கள் மூலம் உலகில் மீண்டும் ஆன்மாக்கள் பிறக்கின்றன' என சுவாமி தியானந்த் தமது சத்யார்த் பிரகாஷ் என்னும் நூலில் கூறியிருக்கிறார் என்ற ஒரு கருத்தை எடுத்து வைத்திருந்தார்கள். அந்தக் கருத்து சரியா என முதலில் உறுதி செய்யப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். சுவாமி தியானந்த் அப்படி ஒரு கருத்தைக் கூறவே இல்லை என முரளீதர் வாதிட்டார். இரண்டாவது நாள் கூட்டத்தில் முதல் நாள் விவாதத்தின் நிகழ்ச்சிகளைக் கொண்டு வர வேண்டாம்; தேவையானால் அந்த ஆதாரத்தைப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று கூறப்பட்டது. ஆனால் அவர் முரண்டு பிடித்தார். அவரது போக்கைப் பார்வையாளர்கள் எதிர்த்தனர். இருந்த போதிலும் அவர் தமது நிலையை மாற்றிக் கொள்ளவில்லை. வீணாகக் காலத்தை விரயமாக்கிக் கொண்டிருப்பதைத் தவிர்ப்பதற்காக அந்தக் குறிப்பு, விவாதம்

தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்படும் என்று ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் எழுத்துப்பூர்வமான உறுதிமொழியை அளித்தார்கள். சொன்னபடி இந்த விபரம் அறிக்கையில் அளிக்கப்பட்டது. முரளீதர் நீங்காத அவமானத்திற்கு ஆளானார். அந்த ஆதாரம் அந்நூலின் 1875 –ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட பதிப்பின் 263 –ஆம் பக்கத்தில் காணப்பட்டது.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் தமது முதல் கட்டுரையைப் படித்தார். அதில், ஆர்ய சமாஜிகளின் கொள்கைப்படி கடவுளால் எதையும் படைக்க முடியாது. மனிதனால் முழுமையான ஈடேற்றத்தைப் பெறவே முடியாது என்பதால் கடவுள் அன்பில்லாதவராகக் காட்டப்படுகிறார் என்று வாதித்தார்கள். இந்தக் கட்டுரை ஒரு மணி நேரத்தில் படித்து முடிக்கப்பட்டது. முரளீதர் ஒரு மணி நேரத்திற்கும் அதிகமான நேரம் எடுத்துக் கொண்டார். அதில் அவர் ஆர்ய சமாஜிகளின் கொள்கைகளை எடுத்துக் கூறவில்லை. மாறாக ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் ஒரு கேள்விக்குப் பதிலாக இரண்டு கேள்விகளை எழுப்பியுள்ளார் என்பதைப் பற்றியே குறிப்பிட்டார். ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்தத் தப்பெண்ணத்தை அகற்றினார்கள். அதன் பின் முரளீதர் தம் பதிலுரையை எழுதுவதற்கு மூன்று மணி நேரம் எடுத்துக் கொண்டார். இருந்த போதிலும் அவரது பதில் முழுமையாக அமையவில்லை. முழுமையான பதில், பதிலுரையின் பின்னர் அளிக்கப்படும் என்று அவர் கூறியதால், முழுமை பெறாத அந்த உரையையே அவர் படிக்க வேண்டியதாயிற்று. நூற்றுக்கணக்கான மக்கள் கூடியிருந்த அந்தக் கூட்டத்திலேயே அவரது உரையை முழுமையாகப் படித்து முடிக்கும்படி அவர் வற்புறுத்தப்பட்டார். ஆனால் அவர் தமது பதிலுரையை நிறைவு செய்யவுமில்லை; பதிலுரையின் எழுத்துப் பிரதியை ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களிடம் வழங்கவுமில்லை. முரளீதர், தாம் இன்னொரு கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியுள்ளது என்ற சாக்கில், முன்னரே திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த கூட்டத்திலிருந்து முன்பு போலவே வெளியேறினார். அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் சிலரது பெயர்கள் பின்வருமாறு:

சவுத்ரி மெஹர் அலீ, வக்கீல் இலாஹி பக்ஷ், டாக்டர் முஸ்தஃபா அலீ, டெபுடி இன்ஸ்பெக்டர் பாபு அஹ்மது ஹுஸைன், மியான் அப்துல் ஹகீம், டபேதார் மியான் சஹாபுத்தீன், வக்கீல் நாராயண் தாஸ், வக்கீல் பண்டிட் ஜெகன் நாத், தலைமையாசிரியர் ராம் லட்சுமண், ஹரி கிஷன் தாஸ், வக்கீல் கணேஷ் தாஸ், சீதா ராம், ஷத்ரு கான், ஷத்ரன் ஜீ, குலாப் சிங், ஆசிரியர் குலாம் ரஸூல், ஆசிரியர் ஃபத்ஹே தீன் ஆகியோர்.

விவாதத்தை முழுமையாக நிறைவு செய்ய முரளீதர் விரும்பினால், ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் மேலும் இரண்டு நாட்கள் அங்கேயே தங்கத் தயாராக இருந்தார்கள். ஆனால் முரளீதர் அதற்கு இணங்கவில்லை. எனவே 1886 –ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 –ஆம் நாள் ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் காதியான் திரும்பினார்கள். மார்ச் 11 –ஆம் தேதியிட்ட கடிதம் ஒன்றில் தாம் 1886 –ஆம் ஆண்டு மார்ச் மாதம் காதியான் திரும்ப இருப்பதாக எழுதியுள்ளார்கள். ஆனால் என்னுடைய (அதாவது நூலாசிரியரான மவ்லானா அப்துர் ரஹீம் தர்து ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடைய) மாமாவின் குறிப்புப் புத்தகம் ஒன்றில் அந்தக் குழுவினர் மார்ச் மாதம் 17 –ஆம் தேதி காதியான் திரும்பியதாகத் தெளிவாக எழுதப்பட்டிருப்பதை நான் கண்டிருக்கிறேன்.

ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்கள் இந்த விவாதத்தில் ஈடுபட்டதற்கான ஒரே நோக்கம் உண்மையைப் பரப்புவதும் பொய்யை மறுப்பதுமேயாகும். அதில் எந்த விதமான மிகைப்படுத்துதலோ, வெறுப்புணர்வோ, மார்க்க ரீதியான வீண் பெருமையோ இருக்கவில்லை. தம்முடைய மேதாவித்தனத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பது ஹஸ்ரத் அஹ்மது (அலை) அவர்களின் விருப்பமாக இருக்கவில்லை. உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என்பதே அவர்களுடைய விருப்பமாக இருந்தது. அன்னார் (அலை) வேண்டுமென்றே விவாதங்களில் ஈடுபடவில்லை. எப்பொழுதெல்லாம் உண்மைக்குப் பங்கம் ஏற்படுகிறதென்று அவர்கள் கருதினார்களோ அப்போது அவ்வாறு செய்வது, அவர்கள் மீதான இறை கடமை என்று கருதியதால் மகிழ்ச்சியோடு வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டார்கள்.

(தொடரும்...)



*(19 -ஆம் பக்கத்தின் தொடர்ச்சி...)*

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

“முனா.ஃ.பிக்குகளை எதிர்க்குமாறு நான் கூறுகின்றேன் என்றால் அதன் பொருள் அவர்களின் நடவடிக்கைகளை அறிந்து கொண்டு அதனைக் குறித்து ஜமாஅத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்பதாகும்.” (அன்வாருல் உலூம் பாகம் 10 பக்கம் 93)

முனா.ஃ.பிக்குகளின் .ஃ.பித்னாவை முறியடிப்பது ஒவ்வொரு நம்பிக்கை கொண்டவரின் கடமையாகும் என்று அன்னார் கூறினார்கள்.

முனா.ஃ.பிக்கத்தைக் காணும் போது அதனைச் சுட்டிக் காட்டுவது நமது கடமையாகும். நாம் மக்களின் எண்ணங்களைப் பார்ப்பதில்லை. அவர்களின் செயல்களையே பார்க்கிறோம். மக்களின் நோக்கங்களைத் தீர்மானிக்க முடிவு செய்தால் அது சூனிய வேட்டை போன்றதாகி விடும். அது தடுக்கப்பட்டுள்ளது. எனவே நாம் செயல்களையே பார்க்கிறோம். அவர்களின் செயல் முனா.ஃ.பிக்கத்தாக இருந்தால் நாம் அதனை சுட்டிக் காட்ட வேண்டும். அவர்கள் தம்மை சீர்திருத்திக் கொண்டால் அல்லாஹ் மன்னிப்பவனாகவும் கருணையாளனாகவும் இருக்கின்றான். நாமும் அவ்வாறே இருக்க வேண்டும். அவர்கள் சீர்திருந்தாவிட்டால் நாம் நம்மை அவர்களிடமிருந்து விலக்கிக் கொண்டு கலீ.ஃ.பாவிடம் இது குறித்து தெரிவிக்க வேண்டும்.

முனா.ஃ.பிக்கத்தைச் சுட்டிக் காட்டுவது அதனை வேரோடு அறுப்பதற்குச் சமமாகும். ஏனெனில் முனா.ஃ.பிக்குகள் மறைந்திருக்கவே விரும்புவர். கலீ.ஃ.பாவிற்கும் ஜமாஅத்திற்கும் தெரிவித்து விடுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். ஏனெனில் அவர்களின் நடத்தையில் உள்ள நயவஞ்சகத்தனமான வடிவங்கள் எந்த வகையிலும் ஆவணப்படுத்தப்படுவதை அவர்கள் விரும்புவதில்லை. அவர்களின் நயவஞ்சகத்தனத்தைச் சுட்டிக் காட்டுவதே போதுமானது. ஏனெனில் நயவஞ்சகத்-தனத்திற்கு எந்தத் தற்காப்பும் இல்லை. முனா.ஃ.பிக்குகள் தங்களுக்குள் முரண்படுகிறார்கள். அவர்களின் நடத்தை நம்பிக்கை கொண்டவர்கள் மற்றும் நல்லியல்பு கொண்ட கா.ஃ.பிரகளின் பார்வையில் மிகவும் அவமானகரமானது. அது எந்த அளவுக்கு இழிந்தது என்றால் அதனை வெறுமனே அம்பலப்படுத்துவதே அதனை பயமுறுத்தி விடுகிறது.

முனா.ஃ.பிக்குகளை விட்டும் முனா.ஃ.பிக்கத்தை விட்டும் அல்லாஹ் நம்மைப் பாதுகாப்பானாக!

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:



வஸிய்யத் அமைப்பு முழுமை அடையும்போது, இதன் மூலம் தப்லீக் மட்டும் நடைபெறாது. இஸ்லாத்தின் விருப்பத்திற்கேற்ப ஒவ்வொரு நபருடைய தேவையும் இதன் மூலம் நிறைவேற்றப்படும். கஷ்டமும் வறுமையும் உலகிலிருந்து எடுக்கப்படும் – இன்ஷா அல்லாஹ். அனாதைகள் யாசிக்க மாட்டார்கள். விதவை மக்களிடத்தில் கையேந்த மாட்டார். வசதியற்றவர் கஷ்டத்துடன் திரிய மாட்டார். ஏனென்றால், வஸிய்யத் குழந்தைகளுக்கு தாயாக இருக்கும். இளைஞர்களுக்கு தந்தையாக இருக்கும். பெண்களுக்கு கணவனாக இருக்கும். கட்டாயப்படுத்தாமல் அன்பு மற்றும் உள்ளத்தின் மகிழ்ச்சியுடன் ஒரு சகோதரர் மற்றொரு சகோதரருக்கு இதன் மூலம் உதவி செய்வார். அவர் கொடுப்பது பிரதிபலனை எதிர்பார்த்து இருக்காது. மாறாக, கொடுக்கக்கூடிய ஒவ்வொருவரும் இறைவனிடத்தில் சிறந்த ஈட்டைப் பெறுவார்கள். வசதிபடைத்தவரும் இழப்பில் இருக்க மாட்டார். எந்த ஏழையும் இழப்பில் இருக்க மாட்டார். எந்த சமுதாயமும் மற்ற சமுதாயத்துடன் சண்டையிடாது. மாறாக, அதனது கருணை உலகம் அனைத்திலும் பரவியிருக்கும்..... (நிஸாமே நவ் அன்வாருல் உலூம் பாகம் 16 பக்கம் 601)

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M. Muhammad Sultan Muhiyudeen | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam